ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATIO

JAN 1965

ஜனவரி — 1965



வில்லியம் ஷேக்ஸ்பியர்



ஆரம்பக்கல்வி நிலையம்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

132049



ராயல் ஷேக்ஸ்பியர் தியேட்டர்

T15ஊ211,N40
31K5



ஷேக்ஸ்பியர் பிறந்த வீடு

30 JAN 1965

ஆரம்பக்கல்வி

132049

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

T15m211,N40
31K5

மலர் 27	ஜனவரி 1965	இதழ் 1

இருபத்து ஏழாவது ஆண்டு!

"பத்திரிகையா நடத்தப் போகிறாய்?"

"அதுவும் இந்த ஆரம்ப ஆசிரியர்களை நம்பியா தொடங்கப் போகிறாய்?"

"தேவைதானா இந்தச் செயல்?"

"தேவையோ இல்லையோ, முடியுமா உன்னால்?"

"போயும் போயும் இந்த வேலையைத்தானா நீ தேடிக்கொள்ள வேண்டும்?"

"பேசாமல், சொல்வதைக் கேள். விடு, இந்த வீண் வேலையை; வேறு பயனுள்ள பணியை."

“உன்னிடம் இளமைத் துடிப்பு இருக்கிறது. உணர்ச்சி வேகமும் உற்சாகமும் இருக்கின்றன. ஆர்வமும் ஆற்றலும் நிரம்ப இருக்கின்றன. இத்தனைச் சிறப்புகளையும் வைத்துக்கொண்டு ஏனப்பா இந்த வெட்டி வேலையில் இறங்குகிறாய்?”

இருபத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், நாம், “ஆரம்பக் **கல்வி**” என்னும் இந்த இனிய இதழைத் தொடங்கியபோது, நம் உற்றார் உறவினர்களும், உள்ளன்பு மிகுந்த நண்பர்களும், ஆழ்ந்த அனுபவம் நிறைந்தவர்களும், உலகத்தை நன்றாய் உணர்ந்தவர்களும் இப்படியெல்லாம்தான், எச்சரிக்கை அந்தாதியும் அபாய அகவலும் வாசித்தனர்—நம்மைப் பார்த்து.

T15m211, N40
31K5

நம்மிடத்தில் பொறாமையோ பொச்சரிப்போ கொண்டதால் அவர்கள் காட்டிய அபாய அறிகுறி அல்ல இது. நம்முடைய எதிர்காலம் எழிலும் ஏற்றமும் வளமும் தெளிவும் மிகுந்ததாக இருக்க வேண்டுமே என்கிற நல்ல எண்ணத்தின் விளைவாக அவர்கள் பாடிய எச்சரிக்கை வெண்பாவே இது.

132049

ஆபத்துக்கள் அடுக்கடுக்காகத் தோன்றக்கூடிய ஒரு துறை இது.—இந்த உண்மை நமக்கு மிக நன்றாகத் தெரிந்தது.

இடையூறுகளும் தொல்லைகளும் அணி அணியாகப் படையெடுத்து நம் இதயத்தை அடிக்கடி வேதனைச் சிறையில் தள்ளிப் பூட்டிவிடக் கூடும்—இந்தச் செய்தியும் நம் உள்ளத்தால் உணர முடியாத ஒன்று அல்ல.

ஒன்றன்பின் ஒன்றாக வரக்கூடிய ஆபத்துக்களை எண்ணி நடுங்கி, ஒவ்வொருவருமே அஞ்சி ஒதுங்கி ஓடி ஒளிந்துகொண்டால், பின்னர் யார்தான் ஆரம்ப ஆசிரியர்களின் அளவற்ற துயரங்களைத் துடைப்பதற்குரிய பத்திரிகையைத் தொடங்குவது? எப்படித்தான், எழுத்தறிவிக்கும் அந்த இறைவர்களுடைய வேதனைகள் தீர்வது? எவ்வாறுதான், அவர்களுடைய சிக்கல்களையும் சங்கடங்களையும் ஆட்சியாளர்களுடைய அன்புப் பார்வைக்குக்கொண்டு வருவது?

இந்தக் கேள்விகள் யாவற்றையும் எழுப்பி, இவற்றிற்கு உரி விடையைக் காண முயன்ற நேரத்தில்தான், ஆபத்துகள் ஆயிரமா மாகப் படையெடுத்து வந்தாலும் சரி, தேவையும் பயனும் உ இந்தத் தொண்டில் நாம் இறங்கியே தீரவேண்டும் என்கிற உறுதி உள்ளத்தில் ஊன்றிவிட்டது.

“எதிரி நாட்டைச் சேர்ந்த நான்கு பட்டாளங்களை எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த நான்கு பத்திரிகைகளைக் க தான் நான் மிகுதியாக அஞ்சுகிறேன். ஏனென்றால் ப

கைகள் அத்துணை ஆற்றல் மிகுந்தவை'' என்று ஒரு முறை அழகுபட மொழிந்தான் மாவீரன் நெப்போலியன். அவன் தெரிவித்த இந்தக் கருத்து நூற்றுக்கு நூறும் உண்மை என்பதை, இன்றைய ஜனநாயக சகாப்தத்தில் வாழ்கிற சிந்தனையாளர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர். உண்மையிலேயே ஒரு பத்திரிகை என்பது, அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும் படைத்த அடலேறு ஒருவனின் கையில் ஏந்தப்பட்ட போர்வாளுக்கு ஒப்பானது. ஒரு கட்சியினரிடம் அல்லது ஒரு வகுப்பினரிடம் அல்லது ஒரு குழுவினரிடம் ஆற்றல் மிகுந்த ஒரு பத்திரிகை இருக்குமானால், அது, அந்தக் கட்சி—அல்லது வகுப்பு அல்லது குழுவின் சிறப்பையும் செல்வாக்கையும் பலத்தையும் புகழையும் ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

அண்மைக் கால உலக வரலாற்றின் ஏடுகள் இந்த உண்மைக்கு உரிய சான்றுகளை ஏராளமான அளவில் பெற்றிருக்கின்றன.

இருபத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த எண்ண அலைகள் எல்லாம் நம் இதயக் கடலில் எழுந்தும் விழுந்தும் குதித்துக் கூத்தாடின. அந்த ஆட்டத்தின் விளைவு, ''**ஆரம்பக் கல்வி**''யின் தோற்றம்.

''ஆரம்ப ஆசிரியர்களின் உரிமைகளுக்காகப் போராடும் ஒப்பற்ற கருவி.''

''இணையற்ற முறையில் பணிபுரியும் எழில் மிக்க ஏடு''

''இடையீடின்றித் தொண்டாற்றும் இனிமை மிகுந்த இதழ்.''

''ஆயிரமாயிரம் ஆசிரியர்களின் உரிமை முரசு—இதய கீதம்''

''ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கும் கிடைத்துள்ள தன்னிகரற்ற நண்பன், வழிகாட்டி, ஞானாசிரியன்.''

''எங்கள் உள்ளங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டுவிட்ட தெள்ளுதமிழ் ஓவியம்.''

''பாராட்டுகிறோம், உங்கள் பணியை; வாழ்த்துகிறோம், உங்கள் இதழை.''

இப்படியெல்லாம்தான் வாழ்த்துச் செய்திகளும் பாராட்டு உரைகளும் வந்து குவிந்தபடியே இருக்கின்றன, சென்ற சில ஆண்டுகளாக. பல்லாயிரக்கணக்கில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள்—பள்ளிக்கூட நிர்வாகிகள் ஆகியோரின் இதயம் கனிந்த இத்தகைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் பார்க்கும்போது, ''**ஆரம்பக் கல்வி**'' இதழா

னது, சென்ற இருபத்து ஆறு ஆண்டுகளாக ஆற்றிவரும் தொண்டு, எவ்வளவு தேவையானது—எத்துணைப் பயன் மிகுந்தது என்பது தெள்ளத் தெளிவாக விளக்கமாகிறது.

இந்தத் திங்கள் முதல் இருபத்து ஏழாவது ஆண்டு தொடக்க மாகிறது, "ஆரம்பக் கல்வி" இதழுக்கு. ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனைப் பேருடைய உள்ளத்திலும் இன்பத் தேன் பாய்ச்சவல்ல ஏற்றமிகு செய்தியல்லவா இது"

இருபத்து ஆறு ஆண்டுகளை ஒன்றன் பின் ஒன்றாக முடித்து விட்டு இருபத்து ஏழாவது ஆண்டைத் தொடங்குவது என்பது, எந்தப் பத்திரிகைக்குமே பூரிப்பையும் பெருமையையும் அளிக்கத்தக்க இன்ப நிலை ஆகும். அதிலும் செல்வமும் செல்வாக்கும் அற்ற ஏழை ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக நடத்தப்படுகிற ஓர் இதழுக்கு இந்த உயரிய நிலை என்றால், பூரிப்பும் பெருமையும் பல மடங்கு கூடுதலாகத்தானே செய்யும்?

நாம் கூறத் தேவையில்லை. ஆசிரியப் பெருமக்கள் நன்றாக அறி வார்கள். நாடும் நன்கு அறியும். சென்ற இருபத்து ஆறு ஆண்டு களாக, நம்முடைய இதழ், ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கையில் துயரமும் தொல்லையும் குறைந்து எழிலும் இன்பமும் பெருகவேண் டும் என்கிற உயர்ந்த குறிக்கோளுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவந்திருக்கிறது.

"ஆரம்பக் கல்வி" இதழானது, ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கியிருக்கிறது; அவர்களுடைய வாழ்க்கைப் பாதையில் சிக்கல்கள் தோன்றியபோதெல்லாம் அவற்றை அடியோடு அகற்றுவதற்காக அரும்பணி ஆற்றியிருக்கிறது; அரசாங்கத்தின் புதிய புதிய உத்தரவுகளாலும் கொள்கைகளாலும் அவர்களுக்குத் தொல்லைகளோ துயரங்களோ ஏற்பட்ட காலங்களில், அந்த உத்தரவு களையும் கொள்கைகளையும் மாற்றியமைப்பதற்காக முழுமூச்சுடன் போராடியிருக்கிறது; அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் உயர்வதற் காகவும், பிற வசதிகள் பெருகுவதற்காகவும் இடையீடின்றிப் பணி யாற்றி வந்திருக்கிறது.

வாடிய முகமும் வதங்கிய தோற்றமும் வேதனையில் தோய்ந்த இதயமும் படைத்தவர்களாக— சோக சித்திரங்களாக அல்லல் உறக் கூடாது ஆரம்ப ஆசிரியர்கள். நிமிர்ந்த முகமும் நேர்கொண்ட பார் வையும் களிப்புக் கடலில் துள்ளிக் குதிக்கும் உள்ளமும் படைத்தவர் களாக—மகிழ்ச்சியின் சின்னங்களாக ஒளிவீசித் திகழவேண்டும் அவர்கள் என்பதே நம்முடைய ஆசை

ஆரம்ப ஆசிரியர்களுடைய அன்பு மனைகள் நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்கிற கேள்விக் கணையால் தொடுக்கப்பட்ட வறுமை வட்டாரங்களாக விளங்கல் ஆகாது. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளை எளிதில் பெற்றுப் பூரிக்கத்தக்க புன்னகைப் பூந்தோட்டங்களாகக் காட்சி அளிக்கவேண்டும் என்பதே நம்முடைய ஆவல்.

ஆரம்ப ஆசிரியர்களுடைய பிள்ளைகள், "ஏதோ ஓரளவு படித்தார்கள்—என்னவோ ஒரு வேலையைப் பெற்ருர்கள்—எப்படியோ பொழுதை நகர்த்திக் கொண்டிருக்கிருர்கள்" என்று சொல்லத்தக்க சோர்வு நிலையை வாழ்க்கையில் பெறலாகாது," "அதோ போகிருர்களே, அவர்கள் யார் தெரியுமா? நம் ஊர் ஆரம்ப ஆசிரியர்களுடைய அருமைப் பிள்ளைகள். நன்ருகப் படித்துப் பல பட்டங்கள் பெற்றுப் பாங்கான பதவிகளில் வீற்றிருக்கிருர்கள். நம் ஊருக்கே ஒரு தனிப் பெருமை, புகழ், சிறப்பு, இவர்களால்" என்று பிறரெல்லாம் பார்த்துப் பாராட்டத்தக்க பொன்னுநிலை பெறவேண்டும் என்பதே நம்முடைய ஆர்வம்.

இந்த ஆசையை, ஆவலை, ஆர்வத்தை நிறைவேற்றுவதற்காகச் சென்ற இருபத்து ஆறு ஆண்டுக் கால உழைப்பை அர்ப்பணித்திருக்கிறது "ஆரம்பக் கல்வி."

இருபத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்ப ஆசிரியர்களுடைய வாழ்க்கையில் காணப்பட்ட வசதிகளைவிட இன்றைய தினம் காணப்படுகிற வசதிகள் அளவிலும் தரத்திலும் உயர்ந்தவை என்பதை யாரும் மறக்க முடியாது.

அக்காலத்தில் அவர்களுக்குக் கிடைத்து வந்த ஊதியத்தைவிட இந் நாளில் அவர்கள் பெற்று வருகிற ஊதியம் ஓரளவுக்கு அதிகம் என்பதையும் யாரும் மறுத்துவிட இயலாது.

அந் நாளில் அவர்களுக்குத் தரப்பட்ட செல்வாக்கையும் மதிப்பையும் விட இந் நாளில் தரப்படுகிற செல்வாக்கும் மதிப்பும், குறிப்பிடத்தக்க அளவு, கூடுதல்தான். இதையும் யாரும் இல்லையென்று கூறிவிட முடியாது.

அந் நாளில் அவர்களுடைய வாழ்க்கையில் காணப்பட்ட இருள்-இடர்—துயர்—தொல்லை—வேதனை—வறுமை ஆகியவை, இந் நாளில் முற்றிலும் அகன்று விட்டன என்று கூறமுடியாது. ஆனால் அவை யாவும் பெரிதும் குறைந்திருக்கின்றன என்று தைரியமாகக் கூற முடியும்.

அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல் முழுவதும் முன்னேற்றம் அவ்வளவும், "ஆரம்பக் கல்வி" யின்

அயராத உழைப்பால்தான் ஏற்பட்டது என்று நாமும் கூறமுடியாது. உண்மையும் அல்ல அது. ஆனால், இந்த மகத்தான மாறுதல் ஏற்படுவதற்காக அயராது உழைத்தவர்களின் பட்டியலில் "ஆரம்பக் கல்வி" இதழ்க்குத் தலை சிறந்த இடம் உண்டு என்பதைமட்டும் யாவரும் மறுத்துவிட முடியாது.

நாம் பல முறை எடுத்துக் காட்டியிருப்பதைப்போல், ஆசிரியர்களுடைய ஊதியம் கண்ணியமான அளவுக்கு உயர்ந்து, அவர்களுக்குக் கிடைக்கிற வசதிகள் போதிய சிறப்புடையனவாக இருந்தாக வேண்டும் என்கிற குறிக்கோளுக்காக நாம் நீண்ட பல ஆண்டுகளாகப் போராடி வந்திருப்பதைப் போலவே இனியும், போராடுவோம். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் இதுவரை நாம் சிறப்பான பல வெற்றிகளை ஈட்டி யிருப்பதைப் போல இனியும் ஈட்டுவோம். ஆம்! இதில் துளியும் ஐயமில்லை! ஆனால் ஆசிரியப் பெருமக்கள் அனைவரும், கூடுதலான ஊதியமும் தேவையான வசதிகளும் பெற்று, தொல்லையும் துயரமும் அற்ற வாழ்வு வாழ்ந்துவிட்டால் மட்டும் போதும்—பிரச்சினைகள் யாவும் அந்த அளவோடு முடிந்துவிடும் என்று நாம் ஒருநாளும் கருதியதில்லை. அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மகத்தான மறுமலர்ச்சி ஏற்பட்டாக வேண்டும் என்பது நம்முடைய அழுத்தந்திருத்தமான கருத்து. இந்த 1965—ஆம் ஆண்டிலும் பழமைக் குட்டைகளில் ஊறிய மட்டைகளாகக் காட்சி தரக்கூடாது. ஆரம்ப ஆசிரியர்கள். சாதி குலம் சமயம் எனும், சுழிபட்டுத் தடுமாறாத சீர்திருத்தச் சிற்பிகளாக விளங்கவேண்டும். பகுத்தறிவுப் பாதையில் அஞ்சாத நெஞ்சத்துடன் வீர நடைபோடும் ஆற்றல் மறவர்களாக மாற வேண்டும். கலை உரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும், கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும் என்று கூறும் உள்ள உரம் அவர்களுக்கு உண்டாக வேண்டும். சடங்கு—சம்பிரதாயம்—முன்னோர் வழக்கம்—பழைய பழக்கம் ஆகிய அடிமைத் தளைகளில் கட்டுண்டு அழிந்து போகாமல், பகுத்தறிவு என்கிற உரைகல்லைக் கொண்டு எதையும் ஆராய்ந்து பார்க்கிற அறிவு அவர்களுக்கு உண்டாக வேண்டும். எடுத்ததற்கெல்லாம் சாஸ்திரத்தையும் தொட்டதற்கெல்லாம் புராணத்தையும் ஆதாரம் காட்டிக் கொண்டிருக்கும் கிணற்றுத் தவளைகளாக இருக்காமல், மேல் நாட்டு மக்களைப்போல விஞ்ஞானப் பாதையில் நடக்கும் விவேகிகளாகத் திகழவேண்டும்.

தெள்ளத் தெளிவாகக் கூற விரும்புகிறோம். மதம் கூடாது என்பது அல்ல, நம்முடைய கருத்து; மதத்தின் பெயரால் மடமைக்கும் கொடுமைக்கும், தலைவணங்கும் தாத்திர எண்ணம் கூடாது என்பதுதான் நம்முடைய ஆசை. கோயில்களை கூடாது என்பது அல்ல, நம்முடைய குறிக்கோள்; கோயில்கள் கொடியவர்களின்

கூடாரங்களாக ஆகக்கூடாது என்பதுதான் நம்முடைய இலட்சியம். சாஸ்திரங்களை வேண்டாம் என்பதல்ல, நம்முடைய வாதம்; சாஸ்திரங்கள், நம் மக்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டைகளாக மாறக்கூடாது என்பதுதான் நம்முடைய எண்ணம்.

அநீதி, ஆணவம், கொடுங்கோன்மை, இல்லாமை, பசி, பஞ்சம், பிணி, அறியாமை, எழுத்தறிவின்மை-இத்தகைய நச்சுப்பொருள்களின் விசித்திரக் கலவையாகவும் விபரீதக் கூட்டாகவும் வேதனைக் கதம்பமாகவும் இருத்தல் ஆகாது மனித சமுதாயம். நேர்மை, ஒழுங்கு, ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வளம், தெளிவு, எழில், அறிவுடைமை, கல்வி, சால்புடைமை—இத்தகைய செஞ்சுவைச் செழும் பொருள்களின் இனிய தொகுப்பாகவும், செம்மையான சேர்க்கையாகவும், உன்னதமான உறைவிடமாகவும் விளங்க வேண்டும் மானிட சாதி. இந்த உயர்தரமான குறிக்கோளை நோக்கி உலகத்தை அழைத்துச் செல்லும் உன்னதமான பணியில் தமிழ்நாட்டு ஆரம்ப ஆசிரியர்களும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளும் தங்களால் இயன்ற தொண்டை ஆற்றுதல் வேண்டும்.

கல்விப் பொருளை அள்ளி வழங்கும் கருத்து மிக்க பணியை ஆற்றி வரும் இந்த இரு சாராரும், தங்கள் வாழ்வினை வளமும் எழிலும் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்வதற்கான தொண்டில் ஈடுபடுகிற அதே நேரத்தில், மக்கட் சமுதாயத்தின், மொத்த வளர்ச்சிக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் தாங்கள் செலுத்தவேண்டிய பங்கைச் செலுத்த மறந்திடல் ஆகாது.

"உன்னை உயர்த்திக் கொள். பிறரையும் உயர்த்து."-இது தான் கல்வித் துறையினர் ஒவ்வொருவரும் தங்கள் இதயத் தாமரையில் இலட்சிய கீதமாகக் கொள்ளத்தக்க குறிக்கோள்.

இருபத்து ஆறு ஆண்டுகளாக ஆரம்பக் கல்வியின் விரைவான வளர்ச்சிக்காகவும், ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்காகவும், ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளின் நல் வாழ்வுக்காகவும் ஓயாது தொண்டாற்றிவந்த நம் "ஆரம்பக் கல்வி" இதழானது, இனியும் அப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றும்—முன்னைவிட உற்சாகத்தோடு; முன்னைவிட மும்முரமாக; முன்னிலும் பல மடங்கு வேகத்தோடு, விறுவிறுப்போடு.

இப்படிப்பட்ட உறுதிமொழி ஒன்றை நாம் கூறித்தான் ஆக வேண்டும் என்கிற தேவையில்லை. இதுதான் நம் உள்ளக் கிடக்கை என்பதைத் தமிழ்நாட்டு ஆரம்பக் கல்வி உலகம் நன்குக அறியும்.

சென்ற இருபத்து ஆறு ஆண்டுகளாக,

சொற்சுவையும் பொருட் சுவையும் மிகுந்த எழுத்தோவியங்களை நமக்கு அளித்து உதவிய எழுத்துச் சிற்பிகள்,

இந்த இதழின் வளர்ச்சிக்காக இதன் சந்தாதாரர்களாகச் சேர்ந்தும் பிறரைச் சேர்த்தும் துணைபுரிந்த ஆசிரியர்கள், நிர்வாகிகள்,

இந்த இதழின் முன்னேற்றத்திற்காக நம்மால் வெளியிடப்பட்டு வரும் பாடபுத்தகங்களைத் தத்தம் பள்ளிகளில் வைத்து ஆதரவு அளித்துவரும் பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகள்—ஆசிரியர்கள்,

எண்ணற்ற பிற முறைகளால் நம் இதழுக்கு உறுதுணையாக இருந்து வரும் ஏனைய அன்பர்கள்,

யாவருக்கும், தன் அன்பு நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இருபத்தி யேழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது **"ஆரம்பக் கல்வி,"**

ஓங்குக, "ஆரம்பக் கல்வி." வாழ்க, ஆரம்ப ஆசிரியர்!

வாழ்த்தும், வணக்கமும்

பொங்கற் புதுநாள்; எங்கும் மங்களம் பொங்கும் திருநாள்! வாழ்வு சிறக்கவும், வளம் பெருகவும் பிறந்த இப் பொங்கல் நன்னாளில் எங்கள் மனமுவந்த வாழ்த்துக்கள்.

'ஆரம்பக் கல்வி'க்கு அன்புக் காணிக்கையாக ஆயிரக்கணக்கில் வாழ்த்துக்கள் வழங்கிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது உளம் கனிந்த வாழ்த்தும் வணக்கமும்.

— **ஆசிரியர்.**

அறிவியல் பூங்கா

[K. S. மகாதேவன், Bsc. M. A.]

கோடை விடுமுறையை எப்படிக் கழிப்பது என்று இளங்கோவனும் அவன் தங்கை தமிழ்ச்செல்வியும் எண்ணிக் கொண்டிருக்கும்போது ஊரிலிருந்து பூங்கொடியும் இளமாறனும் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் இருவரும் இளங்கோவனின் சின்னம்மா குழந்தைகள். வீட்டில் ஒரே கொண்டாட்டம். வெய்யில் காலமாக இருந்ததால் யாவரும் வெளியில் சுற்றச் செல்லக் கூடாது என்று இளங்கோவனின் தந்தை தடையுத்தரவு போட்டு விட்டார்.

என்ன ? எப்படி ?

ஆனால், அவருக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது! அவரை வீட்டில் இருந்தபடியே குழந்தைகள் அது என்ன? இது என்ன? அது ஏன் அப்படி இருக்கிறது? இது ஏன் இப்படி இருக்கிறது? என்று கேள்வி கேட்டுத் துளைக்கத் தொடங்கி விட்டனர்! நல்லவேளை; கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் இளங்கோவனுக்கு வயது 14. தமிழ்ச்செல்விக்கு வயது 10. பூங்கொடிக்கு வயது 12. இளமாறனுக்கு வயது 10 இருக்கும்.

பாண்டியன் திட்டம்

பாண்டியன் ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி வீட்டின் பின்புறம் உள்ள தோட்டம் தூய்மைப் படுத்தப்பட்டது. தோட்டத்தில் பாண்டியன் நடுவில் உட்கார்ந்துகொள்வார்; குழந்தைகள் அவரைச் சுற்றிலும் உட்கார்ந்துகொள்ளுவார்கள். பல செய்திகள் பற்றி அவர்கள் சுவையாகப் பேசிப் பொழுது போக்கினார்கள். வீட்டுத் தோட்டம் 'அறிவியல் பூங்கா'வாகத் திகழ்ந்தது.

விண் கொள்ளிகள் !

இரவு வானம் அழகாக இருந்தது. இருந்தாற்போலிருந்து இளமாறன் 'அதோ அந்தா' என்று வானத்தைக் கையால் சுட்டிக் காட்டினன். எல்லோரும் அவன் காட்டிய திசையில் திரும்பினர். வானத்தில் ஒரு ஒளிச்சுடர் 'பளீர்' என்று பாய்ந்து சென்று மறைந்தது.

'நட்சத்திரம் எரிந்து விழுகிறது' என்று பூங்கொடி கூவினாள்.

'போடி போ! நட்சத்திரம் எங்கேயாவது எரிந்து விழுமா? இப்படி நாள்தோறும் நட்சத்திரங்கள் எரிந்து விழுந்து விட்டால் அப்புறம் சோதிடம் சொல்வதற்குக் கூட வானத்தில் நட்சத்திரம் இல்லாமல் போய்விடுமே!' என்றான் இளங்கோவன்.

பாண்டியன் சிரித்துவிட்டார். 'என்ன மாமா சிரித்துவிட்டீர்கள்! நட்சத்திரம் எரிந்து விழுவதால்தானே 'எரி நட்சத்திரம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்? என்று தமிழ்ச்செல்வி தன் சொல்லாராய்ச்சியைத் தொடங்கினாள்.

'சொல்லுங்கள் மாமா! நட்சத்திரம் எரிந்துவிழுமா, இல்லையா?' என்று நேரடியாகக் கேட்டான் இளமாறன்.

எத்தனை சூரியன் ?

பாண்டியன் பேசத் தொடங்கி, 'சூரியன் எரிந்து விழும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என்று கேட்டார்.

'இல்லை இல்லை! சூரியன் எரிந்து விழுந்தால் அப்புறம் உலகம் என்ன ஆவது' என்று எல்லோரும் ஒரே குரலில் கூறினார்கள்.

'ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியன்; எனவே நட்சத்திரம் எரிந்து விழுவது என்பது நினைக்கவும் முடியாத ஒரு செய்தியாகும்' என்று விளக்கினார் பாண்டியன்.

குழந்தைகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். 'அடி அம்மா! எத்தனை சூரியன்கள் வானத்தில் இருக்கின்றன!' என்று வியந்தாள் பூங்கொடி.

நட்சத்திரங்கள் மிகத் தொலைவில் இருக்கின்றன. எனவே, அவை வெறும் ஒளிப் புள்ளிகளாக நம் கண்ணிற்குத் தோன்றுகின்றன. நட்சத்திரங்களில் பல நம் சூரியனைவிடப் பன்மடங்கு பெரியவை. ஆனால், இரவுக் காலத்தில் எரிந்து விழும் பொருள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை! அவற்றை எரி நட்சத்திரம் என்று சொல்வதும் குழப்பத்தையே தரும். வேண்டுமானால் 'விண் கொள்ளி' என்று அவற்றை அழைக்கலாம்.

"அப்படி என்றால் என்னதான் அப்படி 'ஆகாய வாணம்' மாதிரி எரிந்து கொண்டு செல்கிறது?" இளமாறன் விடாது கேட்டான்.

'சிறிதும் பெரிதுமான பல கற்கள் விண்வெளியில் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவை பூமியின் விசையால் இழுக்கப்பட்டு அருகில் வரும்

> நான் ஓர் அரண்மனையிலே வசிக்க விரும்பமாட்டேன். அரண்மனையிலே வசித்தாலும் எனக்குத் தேவையானது ஓர் அறைதானே. கீழ் நாட்டார், எளிய முறையில் கட்டப்பெற்ற வீடுகளிலேயே வசிப்பதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கையை ஒரு வழிப்பிரயாணமாகவும், தாங்கள் வசிக்கிற வீட்டை ஒரு சத்திரமாகவுமே கருதி நடந்து வருகிறார்கள். ஆனால் நம்மிலே சில பணக்காரர்கள், தாங்கள் சாசுவதமாக வாழப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
>
> —ரூஸோ.

போது பூமியைச் சூழ்ந்துள்ள காற்று மண்டலத்தில் நுழைகின்றன. அப்பொழுது இவை காற்றில் உராய்ந்து தீப்பிடித்துப் பளீரென்று ஒளி வீசுகின்றன. அதனால் நாம் இப்பொருள்களை இரவில் பார்க்க முடிகிறது' என்றார் பாண்டியன்.

விண் கற்கள்

'இந்தக் கற்கள் பூமியில் வந்து கூட விழுமா?' என்று இளங்கோவன் ஒரு கேள்வியை அச்சத்தோடு கேட்டான்.

'ஆம்! சில வேளைகளில் முற்றிலும் எரிந்து ஆவியாவதற்குள் பூமியில் வந்து இக்கற்கள் விழுந்து விடுகின்றன. இப்படி விழுந்த கற்களுக்கு 'விண் கற்கள்' என்று பெயர். இவை பெரும்பாலும் இரும்பும், நிக்கலும் சேர்ந்த கலவைப் பொருளால் ஆகியிருக்கின்றன.

'இந்த விண்கற்கள் எவ்வளவு பெரிதாக இருக்குமாம்?' என்று பூங்கொடி கேட்டாள்.

'இத்தகைய கற்கள் பெரும்பாலும் நீங்கள் விளையாடுகின்ற கோலிக்குண்டுகள் அளவே இருக்கும். இருந்தாலும் உயிர்ச்சேதம் உண்டாக்கும் அளவிற்குப் பெரிய கற்கள் விழுதலும் உண்டு' என்றார் பாண்டியன்.

'விண் கற்களால் மனிதர்கள் இறந்திருக்கிறார்களா?' என்றாள் தமிழ்ச்செல்வி. அப்போது இளங்கோவன் அச்சத்தோடு வானத்தை நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விழுந்த ஒரு கல் பத்துப் பேரைக் கொன்றது, என்று ஒரு சீன ஏடு கூறுகிறது! பழங்காலத்தில் வட அமெரிக்காவில் 'அரிசோனப் பாலைவனத்தில்' விழுந்த ஒரு கல் ஒரு மைல் அகலமும் 600 அடி ஆழமும் கொண்ட ஒரு பெரும் பள்ளத்தைத் தோண்டி வைத்திருக்கிறது. கிரீன்லாந்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு 'விண்கல்' முப்பத்தேழரை டன் எடை கொண்டதாக இருக்கிறது! சைபீரியாவில் 1908-ம் ஆண்டு ஒரு விண்கல் மழையே பெய்து காடுகளை அழித்தது.

இன்றியமையாதது துறவே. துறவின்றி எவனும் தனது அன்பு முழுவதையும் பிறர்க்கென உழைக்கும் முயற்சியிலே பாய்ச்சி விட முடியாது. துறவி அனைவரையும் சமமாகப் பார்க்கிறான்—மனைவியும் மக்களும் பிறரினும் பார்க்க உனக்குரியர் எனும் கருத்தை நீ ஏன் போற்றுகின்றாய்? உனது வாயிற்படியிலும் பரம்பொருளாகிய நாராயணனே ஓர் ஏழை இரவலனது உருக்கொண்டு பட்டினியால் இறக்கிறான். அவனுக்கு யாதேனும் அளித்தற்குப் பதிலாக, உனது மனைவி மக்களின் பசி தீர்க்க, சுவையுணவுகளை அளிப்பாயோ?

—விவேகானந்தர்

விண் கொள்ளி மழை !

'இந்த விண் கொள்ளிகள் வானத்தில் கண்டபடி திரிந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லலாமா?' என்று இளங்கோவன் ஒரு கேள்வியைக் கேட்டான்.

'இல்லை, இல்லை! இவை குறிப்பிட்ட பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன என்று தெரிகிறது. ஏனென்றால், சில குறிப்பிட்ட பருவங்களில் ஒரே இரவில் விண் கொள்ளிகள் ஆயிரக்கணக்கில் மழைபோல் பொழிகின்றன. சூரியனைச் சுற்றியபடி சென்று கொண்டிருக்கும் நம் பூமி இந்த விண்கொள்ளிக் கும்பல் செல்லும் பாதையிலே நுழையும்போது தான் இத்தகைய கொள்ளி மழை மிகுதியாகப் பெய்கிறது!

"எந்த மாதத்தில் விண் கொள்ளி மழையை அதிகமாக எதிர்பார்க்கலாம்?" என்று கேட்டாள் பூங்கொடி.

"நவம்பர் 13-ம் நாள் வாக்கில் இம்மாதிரி 'வாணவேடிக்கை' நிகழ்ந்து கொண்டு வருகிறது. பொதுவாக இத்தகைய விண் கொள்ளிகள் பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. விண்கற்களைக் கண்டெடுத்துப் பொருட்காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள். அவை நம் பூமி ஆகியிருக்கின்ற பொருளாலேயே ஆகியிருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். எனவே, அவையும் நம் பூமியைப் போன்று சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த பொருளாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். சிலர் விண் கொள்ளிகளுக்கும் வால் நட்சத்திரங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று நம்புகின்றனர்"

'ஓ, வால் நட்சத்திரம்! நான் பார்த்திருக்கிறேனே!' என்று கூறினாள் தமிழ்ச்செல்வி.

'நட்சத்திரத்திற்கு எப்படி வால் முளைக்கிறது?' என்று கேட்டான் இளமாறன்.

"நட்சத்திரத்திற்கு வால் முளைப்பது பற்றி நாளைக்குப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது நமக்குப் பசி முளைத்துவிட்டது; எல்லோரும் சாப்பிடப் போகலாம். எழுந்திருங்கள்!" என்றார் பாண்டியன்.

—"நவ இந்தியா"

"ஓர் இனத்தின் மனத்தை வரி வடிவில் காட்டுவதே இலக்கியம் ஆகும்."

—சானிங்.

"கருப்பொருள் முதலில் தோன்றுகிறது; பின்னர் பல்வகையான பொருள்கள் உருப்பெறுகின்றன. அப்படியே, வாழ்க்கை முதலில் முகிழ்க்கிறது; பின்னர் இலக்கியம் மலர்கிறது. உலகிலே சலவைக் கற்சிலைகள் பெருகும் முன்னர், மலைகளிலே சலவைக் கல் நிறைய இருந்தது.'

—ஃபிலிப்ஸ் புருக்ஸ்.

வங்க மொழியில் திருவாய்மொழி

கல்கத்தா டிச. 2—கல்கத்தா எழுத்தாளர் சங்க சார்பில் திங்களன்று நடைபெற்ற ஒரு விழாவில் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு வங்காளி மொழி பெயர்ப்பான "சஹஸ்ர கீதி" எனும் நூல் வெளியிடப்பெற்றது. ஆசார்ய யதீந்த்ர ராமாநுஜ தாஸர் இம் மொழிபெயர்ப்பு நூலை இயற்றியவர்.

விழாவுக்கு நீதிபதி பி. என். முகர்ஜி தலைமை வகித்தார். வங்க மாநிலக் கல்வி மந்திரி திரு ரவீந்திரலால் சின்ஹா நூலை வெளியிட்டார்.

* * *

"அச்சுக்கோப்பவராக" உப-ராஷ்டிரபதி

புதுடில்லி, டிச. 13—திவான் இ-கலீப் நூலின் ஜெர்மன் பதிப்பின் பெரும் பகுதியைத் தாம் அச்சுக் கோத்ததாக உப ராஷ்டிர பதி டாக்டர் ஜாகிர் ஹுஸேன் இங்கு இன்று கூறினார்.

அரசாங்க அச்சகம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில், தாம் ஜெர்மனியில் இருந்த காலத்தில் அச்சுத் தொழிலைக் கற்றதாகவும், திவான். இ. கலிப் நூலின் பெரும் பகுதியை அச்சுக்கோத்ததாகவும். அழகாகப் பதிக்கப் பட்ட அந்நூல் இந்தியாவில் பெரும் புகழ் பெற்றதாகவும், அந்த அமைப்பு முறையிலேயே இரண்டு பதிப்புக்கள் வெளியானதாகவும் அவர் தெரிவித்தார்.

* * *

செய்திக் கொத்து

அயல் நாடுகளில் நம்முடைய கலாச்சாரத்தைப்பரப்ப இங்கு ஆங்கிலம் நீடிப்பதவசியம்

மே. வங்க மேல்சபைத் தலைவர் கருத்து.

கட்டாக், டிச. 26—தேசியஒற்றுமை ஒருமைப்பாடுஆகியவற்றை உத்தேசித்தும், ஐரோப்பிய நாடுகளிலும் வெளி நாடுகளிலும் இந்திய கலாச்சாரத்தைப் பரப்பவும் இந்தியாவில் ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று தேசியப் பேராசிரியரும், மேற்கு வங்க மேல் சபைத் தலைவருமான டாக்டர் சுனிதிகுமார் சட்டோபாத்யாயா கேட்டுக் கொண்டார்.

அதே சமயத்தில் பிராந்திய மொழிகளும், பூர்ணமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

40—வது அகில இந்திய வங்க இலக்கிய மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

ஆங்கிலத்தை எதிர்த்து அதற்குப் பதிலாக இந்தியை ஆதரிப்பவர்கள் ஆஷாடபூதிகளாவர் என்றார். நாம் இத்தகைய தவறான எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும் என்றார்.

பேரலையும்,

மதுரை, டிச. 28—இந்துக்களின் புண்ணிய தீர்த்தமாக மதிக்கப் பெறும் தனுஷ்கோடி, இன்று நாசத்தின் சுவடுகள் நிறைந்த நகரமாகக் காட்சியளிக்கிறது. 22-23ந் தேதி இரவில் வீசிய கோரப் புயலும், கடல் கொந்தளிப்பும் இந்நகரை இத்தகைய நிலைக்கு உருக்குலைத்து விட்டிருக்கிறது.

நாட்டில் ரயில்பாதை முடிவடையும் இடமாக விளங்கிய தனுஷ்கோடி, இந்தச் சிறப்பை இழந்து நிற்கிறது. இலங்கையிலுள்ள தலை மன்னருக்குக் கப்பல்கள் புறப்படும் துறைமுகப் பாலமும் செப்பனிட முடியாத அளவுக்குச் சேதமுற்றிருக்கிறது.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒன்றரை மைல் தொலைவிலுள்ள சேதுகரை (ஸ்நான கட்டம்) கண்ணுக்கே தெரியவில்லை. தண்ணீர் மூடிக் கொண்டிருக்கிறது.

யாத்ரீகர்களுக்குத் தங்க இடமளித்து வந்த சாது மடமும் அருகிலுள்ள ஆலயமும் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது.

இந்தப் புனித ஸ்தலத்தை இவ்வாறு உருக்குலைத்து விட்ட அந்தக் கொடிய இரவு குறித்து ஒரு ரயில்வே அதிகாரி கூறும் தகவல்கள் வருமாறு:

இரவு ஒரு மணிக்குப் புயல் ஆரம்பமாகியது. ஒரு பேரலை சீறி எழுந்து இந்தப் பகுதி பூராவையும் ரௌத்திராகாரமாகத் தாக்கியது.

பின்னர் அரை மணி நேரத்துக்குப் பயங்கர அமைதி நிலவியது. பிறகு இதை விடப் பிரும்மாண்டமான அலை 25 அடி உயரத்துக்கு எழுந்து வீசியது. கடற் கரையைச் சீற்றத்துடன் தாக்கி, 5 இடங்களில் கரையை அரித்துக் கொண்டு நகருக்குள் புகுந்தது. ஓரிடத்தில் அரை மைல் தூரத்துக்குக் கரையை அரித்திருக்கிறது.

இந்தப் பகுதி பூராவையுமே கடல் நீர் கவ்விக் கொண்டது. விடியற்காலை 3 மணி வாக்கில் ராமேசுவரத்துடன் தந்தி டெலிபோன் தொடர்பு இல்லாமல் போய்விட்டது.

தனுஷ்கோடியில் 800 பேர் வசித்து வந்தார்கள். இவர்கள் மேடான இடத்தில் அமைந்துள்ள ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓடி விட்டார்கள். அன்று பிற்பகல் வந்து சேர்ந்திருந்த இந்தோ

ஊரை அழித்தது;

புயலுருவாய்!

சிலோன் எக்ஸ்பிரஸ் ரயிலின் பெட்டிகளில் போய் தஞ்சம் புகுந் தார்கள்.

அன்று வந்த பாம்பன்–தனுஷ் கோடி பாசஞ்சர் மரணத்தின் கொடிய பிடியை நோக்கி ஓடி வந்ததாகத்தான் சொல்ல வேண் டும். அது அன்று தாமதமாகவே வந்தது. தனுஷ்கோடி ஸ்டேஷ னுக்கு வெளியே கை காட்டிக்கு அருகில் அது சமிக்ஞைக்காக நிறுத்தப்பட்டது.

பச்சைக்கொடியை எதிர் நோக் கிக் காத்திருந்த ரயில், சமிக்ஞைக் காகக் கூவியபோது, மரண தேவ தையின் பச்சைக் கொடிக்காகவே கூவுகிறது என்பதை அந்த டிரை வரோ அல்லது பிரயாணிகளோ கொஞ்சமாவது அறிந்திருப்பார் களா ?

இந்த ரயிலிலிருந்து 105 பிர யாணிகளும் 5 சிப்பந்திகளும், ரயில் பேரலையால் தாக்கப்பட்ட போது உயிரிழந்திருக்க வேண்டு மென்று அஞ்சப்படுவதாக ரயில்வே இலாகா அறிக்கை கூறி யது.

ரயில் பூராவுமே சுக்கு நூறாக நொறுங்கியது. இஞ்சினின் மேல் பகுதி மட்டும் நீர் மட்டத்துக்கு மேல் தலையை நீட்டிக் கொண்டு காட்சியளிக்கிறது. ரயில் பெட்டி களின் உடைந்த பகுதிகள். 15 மைல் தொலைவில் உள்ள ராமேசு வரம் கரையில் கூட மிதக்கின் றன.

இந்தக் கோர விபத்தில் உயிர்ச் சேதம் இன்னும் நிறைய இருக்கு மென்று அதிகாரப் பூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன.

அருகிலுள்ள ஒரு கிராமத் தைச் சேர்ந்த 60 குடும்பத்தினர் (300 பேர்) பூராவும் அடித்துக் கொண்டு போகப்பட்டதாக ஊர் ஜிதமற்ற தகவல்கள் கூறுகின் றன.

இன்று தனுஷ்கோடிக்குப் போன ஒரு நிருபர், வெறிச் சோடிப் போன தோற்றத்தையே காண முடிந்தது. ஒரு சில உள் ளூர் வாசிகள் மட்டும் தாங்கள் இழந்து விட்ட பொருள்கள் ஏதாவது திரும்பக் கிடைக்குமா வென்று தேடி அலைந்து கொண் டிருந்தார்கள்.

முன்னர் யாத்ரீகர்கள் வந்து தங் கியிருந்த சத்திரங்கள் அனைத்தும் தரை மட்டமாகி விட்டிருக்கின் றன. யாத்ரீகர்களைக் கூவிக் கூவி அழைத்து, பண்டங்கள் விற்று

உயிரைப் பறித்தது!

வந்த அந்த வியாபாரிகள் இன்று எங்கே? ஒருவர் கூடக் காணோம்.

தனுஷ்கோடியிலிருந்து குறுக்காகப் போனால் ஆறு மைல் தொலைவில் இருப்பது ராமேசுவரம். தனுஷ்கோடியை விட மேடான இடத்திலிருந்தும் கூட சேதத்திலிருந்து இது தப்பவில்லை.

ஆனால் ராமநாத ஸ்வாமி ஆலயமும் பிராகாரங்களும் சேதமின்றித் தப்பியுள்ளன. ஆலயத்தின் வெளிப் புறம் வரைதான் தண்ணீர் எட்டியிருக்கிறது. புயலின் கோரதாண்டவத்திலிருந்து தப்பும் பொருட்டு ஆயிரக் கணக்கான பேர் ஆலயத்துக்குள்தான் வந்து புகுந்து கொண்டார்கள்.

இங்கு புயலினால் உயிர்ச்சேதம் 20 லிருந்து 25 வரை இருக்கும் என்று உள்ளூர் வாசி ஒருவர் நிருபரிடம் கூறினார். மீனவர்கள் குடிசைகள் பூராவும் நாசமடைந்துள்ளன. 40 வீடுகள் கொண்ட ஹரிஜன காலனி நாசமடைந்துள்ளது.

சில நல்ல வீடுகளின் கூரை காற்றில் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது.

ராமேசுவரம் தீவு பூராவின் ஜனத் தொகை 20 ஆயிரம். இதில் 7 ஆயிரம் ராமேசுவரம் நகரின் ஜனத் தொகை.

அன்றிரவு பற்றிச் சொல்கையில் அவர்கள் நடுக்கத்துடன் தான் பேசத் தொடங்குகிறார்கள். விடியற்காலை 4 மணிக்கு 22 அடி உயர, பேரலை யொன்று ராமேசுவரம்கரையைத் தாக்கியதாம்.

கடலில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த 2 யந்திரப் படகுகள் கரைக்குள் ஒரு பர்லாங் தூரத்தில் அடித்துக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறதாம். பல மீன் படகுகளும், கரைக்குள் வெகு தூரம் அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன.

மணல் மேடுகள் இருக்கவே இவை இந்த அளவோடு நின்றிருக்கின்றன. இல்லா விட்டால் இன்னும் எவ்வளவு தூரம் போயிருக்குமோ யார் கண்டது?

காஞ்சி ஆசாரியாரினால் கட்டப் பெற்ற சங்கர மடமும் சேதமின்றித் தப்பியுள்ளது. ஆனால் அதற்குள்ளும் கடல் நீர் புகுந்து விட்டது. ஆனால் யாத்திரீகர்கள் தங்குவதற்காக ரூ. 15000 செலவில் கட்டப் பட்ட இரண்டு கொட்டகைகள் விழுந்து விட்டன.

அவதிப்படும் ஏழைகளுக்குச் சாப்பாடு போட ஆலய அதிகாரிகளும் மடத்து அதிகாரிகளும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அன்று சுமார் 500 ஆடுமாடுகளுக் கோழிகளும் மடிந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சடலம் ஏதாவது மிதந்து வந்தால் அவற்றைக் கண்டெடுப்பதற்காக ராமேசுவரம் கரையில் போலீஸ் கோஷ்டிகள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

—தினமணி.

ஞானி ஷேக்ஸ்பியர்

[பி. கோதண்டராமன்]

உலக மகாஞானி ஷேக்ஸ்பியரின் நானூறாவது பிறந்த திருநாள். உலகெங்கும் எம்மொழி பேசுவோரிடையேயும் கொண்டாடப்படுகிறது. ஷேக்ஸ்பியர் 1564-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் தேதி இங்கிலாந்தில் சிற்றூர் ஒன்றில் பிறந்தார். 1616-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி அதே ஊரில் உயிர் துறந்தார். இங்கில உலகில் அவர் வாழ்ந்ததெல்லாம் ஐம்பத்திரண்டு ஆண்டுகளேயாம். சற்றேறக் குறைய இருபது ஆண்டுகள் படைக்கும் வேலையில் ஈடுபட்டு, ஆண்டுக்குச் சற்றேறக்குறைய இரண்டு நாடகங்கள் வீதம் மொத்தம் எழுதிய முப்பத்தேழு நாடகங்களும், சிறு காவியங்கள் இரண்டும், சான்னட் எனப்படும் இசை தோய்ந்த தன்னுணர்ச்சிப் பாடல்கள் நூற்றைம்பதும் ஆகிய இவையே அவருடைய படைப்புகள் யாவும். படைப்பின் அளவில் இவரையும் மிஞ்சின கவிகள் பலர் இருக்க, மற்றெல்லோரையும்விட, இவரையே உலகப் புகழ் பெற்ற மகாகவியென்றும், உலக மகாஞானியென்றும், விசுவமேதையென்றும் சிறப்பித்துக் கூறுவதேன்? உலகின் எட்டு திக்குகளிலும் இவரது புகழ் நாள்தோறும் பரவி வருவதும், இவரையும் இவருடைய நாடகக் காவியங்களையும் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் பெருகி வருவதும், இவருடைய நாடகங்கள் உலகெங்கும் சுதேச மொழிகளில் பெயர்க்கப்பட்டும் நடிக்கப்பட்டும் வருவதும் ஏன்?

மானிட உள்ளம் அறிந்த மகாகவி

காரணம் இல்லாமல் இல்லை. ஷேக்ஸ்பியர் ஒருவரே மற்றவர் எவரையும் விட மானிட உள்ளத்தின் ஆழங்களை யெல்லாம் தம் அகவிழியால் கண்டு, தேனினும் இனிய மொழியில், ஆற்றலும் அழகும், கற்பனைத் திறனும் வாய்ந்த, மானிடான்மாவை விழுப்பம் செய்யவல்ல ஹாம்லெத், மாக்பெத், ஒதெல்லோ, லியர் மன்னன் போன்ற அமர படைப்புக்களைத் தந்திருக்கிறார். ரத்தமும் சதையும் உயிரும் உள்ள மனிதரை நேருக்கு நேராகக் காணவும், அவர்களை அலைத்து வருத்தும் வாழ்க்கைப் பிரச்னைகளை அறியவும் நாம் அவர் பால் தான் திரும்புகிறோம். கிரேக்க நாடகப் பேராசிரியர்களாக எஸ்கிலஸ்ஸும் சோபோகிலஸ்ஸும் மிகப் பயங்கரமான துன்ப நிலையில் உழலும் அகமெம்னன் போன்ற பிரதான பாத்திரங்களை ஷேக்ஸ்பியரையும் விட உருக்கமாகச் சித்தரித்துள்ளனராயினும், நாம் அவர்களின் வெளியுருவங்களை மட்டுமே காண்கி

பசித் துயரில்......

இரந்தும் உயிர் வாழ்தல்
[வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றி யான்
—திருக்குறள்

அண்டையன் பசியால் வாட
அணங்கோடு மாடி வாழ்தல்
மண்டையன் குற்ற மன்று
மனிதன் செய் சூழ்ச்சியம்மா!
—திரு. வி. க.

தனி ஒருவனுக்கு உணவில்லை
[யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்
—பாரதியார்

ஏழை என்றொருவன் உலகில்
இருக்க லாகா தையா?
—தேசிய விநாயகம் பிள்ளை

எங்கே ஏழ்மையும் இல்லாமை யும் இல்லாமல் இருக்கிறதோ, அங்கேதான் மனிதத் தன்மை காண முடியும்.

—லெனின்

பாட்டாளிக்கு வேண்டியது
பரமன் புகழல்ல;
வயிறு நிறைய உணவே.

—தாகூர்

உங்கள் குழந்தைகளுக்கு எளிய, சாதாரண உணவுகளையே பழக்கப்படுத்தி வையுங்கள். தேவையான அளவு அவர்கள் சாப்பிடட்டும்; நன்றாக விளையா டட்டும்.

—ரூஸோ

றோம். ஷேக்ஸ்பியரோ, தம் துன்பியல் நாடகங்களில், உதாரண மாக, ஹாம்லெத்தில், ஹாம்லெத்தின் உள்ளத்தையும் அவன் ஸ்திர புத்தியில் இல்லாமல் திண்டாடுவதையும் அவன் முரண்பாடு களையும் வெட்ட வெளிச்சமாகக் காண்கிறோம். கிரேக்க ஆசிரியர் கள் சித்திரிக்கும் பாரிஸ்ஹெலன் காதல் நம் உள்ளத்தைத் தொடுவ தில்லை. ஷேக்ஸ்பியரின் ரோமி யோ – ஜூலியட்டின் காதலோ நம் உள்ளத்தைப் பெரிதும் கலக்கி விடுகிறது. கிரேக்கத் துன்பியல் நாடகத்தில் பாத்திரங்களின் வினையைத் தேவர்கள் நியமித்து ஒழுங்கு செய்கின்றனர். ஷேக்ஸ் பியரிலோ பாத்திரங்கள் இயல் பாகவே தம் செயல்களைத்தாமே நிர்ணயித்துக் கொள்ளுகின்றனர். நாடகநிகழ்ச்சிகள் அவர்களுடைய உள்ளத்திலேயே உருப் பெறுகின் றன. உதாரணமாக ஹாம்லெத் உறுதியிழந்து தயங்கித் தாமதிப் பது தன் சொந்த செயலினாலேயே யன்றி வேறெவரின் கட்டாயத் தினாலல்ல. ஷேக்ஸ்பியர் நாடக சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட வில்லை. அவர் பழைய மரபுகளை யும் விதிகளையும் உடைத்தெறிந் தார். அவர் நாடக அமைப்பு பற்றி யாதொரு கவலையும் கொள் ளவில்லை. அவரது கவலைபாவும் மக்களைப் பற்றியே இருந்தது. அவர் பாத்திரங்களைப் படைத்து தம்மிச்சைப்படி இயங்கவிட்டு விட்டார். உதாரணமாக, ஜூலி யஸ் சீஸர் நாடகத்தில் புரூட்டஸ் தனக்கேற்பட்ட தவறு, தன்னிட

லிருந்து தோன்றியதே யொழிய விதியினுல் ஏற்பட்டதன்று என உணருகிறுன். இரேக்க நாடகங்கள் வலுப்பெற்றவை; ஷேக்ஸ்பியரின் நாடகங்களோ ஆற்றல் வாய்ந்தவை. ஒன்றை விலக்கி மற்ருென்றைத் தேர்ந்தெடுக்கும் சக்தியானது பிரதான பாத்திரங்களிடம் இருக்கின்றன. இதனுலேயே ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் நம்மைக் கவருகின்றன. அவர் நாடகங்களைப் பார்க்கும் நாம் அப்பாத்திரங்களில் நம்மையே கண்டு அவர்களுடன் முற்றும் ஒன்றிவிடுகிருேம். வேறெவரின் நாடகத்திலும் நாம் இவ்வித அனுபவத்தை அடைவதில்லை. ஷேக்ஸ்பியரைப் போல வேறெவரும் வாழ்க்கையின் வேறுபாடுகளை முற்றும் அறிந்து வெளிப்படுத்தவில்லை.

ஹாம்லெத் என்னும் பெயர் நினைவுக்கு வந்தால் போதும். உடனே அவனுடைய இயல்புகள் யாவும் நம் கண் முன் தோன்றுகின்றன. ஃபால்ஸ்டாஃப் என்ருல் போதும், அவனுடைய பெருத்த உடல், போக்கிரித்தனம் அவனது அறிவு, நேர்த்தியான சொற்கள் அவன் வாயில் உருளும் பான்மை, சாவு நெருங்கிய போது அவன் காட்டிய கம்பீரம் ஆகிய யாவும் நம் கண்முன் நிற்கின்றன. அவன் பால் அன்பும் காட்டுகிருேம்.

தத்துவ ஞானம்

ஷேக்ஸ்பியர் தர்க்க வாதியல்லர்; அவரிடம் கற்பனையே மேலோங்கி இருந்தது. அவர்

ஷேக்ஸ்பியரைப் பற்றி......

காலத்தைக் கடந்தவர், ஷேக்ஸ்பியர்.

—காலரிட்ஜ்

ஷேக்ஸ்பியரின் மூளையை உருவாக்கும் வேலை, உலகத்தை உருவாக்குவதைப் போன்றது.

—வில்லியம் ஜான்சன்

ஷேக்ஸ்பியர் நமது கவியல்ல; உலகக் கவி.

—லேண்டர்

என் வாழ்வில் நான் திருப்தியடைய ஒரு நல்ல காரணம் உண்டு. நான் ஷேக்ஸ்பியரைப் படிக்க முடியும்; ஆழ்ந்த கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியும்.

—ஜான் கீட்ஸ்

மனிதனின் அறிவாளியின் சக்தியை அறிய வேண்டுமானுல் நாம் ஷேக்ஸ்பியர் நூல்களைப் படித்தாக வேண்டும்.

—வில்லியம் ஹாஸலிட்

நாம் என்றும் உச்சரிக்க வேண்டிய வார்த்தைகளை எழுதியே ஷேக்ஸ்பியர் உயிர் வாழ்ந்தார்.

—பென்னர்

இயற்கையின் இனிய குழந்தை ஷேக்ஸ்பியர்!

—தாமஸ் கிரே

ஷேக்ஸ்பியர் பதைரப்பட்ட மக்களின் மனத்தில் நுழையும் ஆற்றல் பெற்றிருந்தார். இந்த முறையில் அவரை இயற்கைக்கு ஒப்பிடலாம்.

—கீபுல்

தாம் தீர்க்க தரிசி என்றோ விசேஷ செய்தி யொன்றை மக்களினத்துக்குக் கொண்டு வந்தவர் என்றோ பெருமை யடித்துக் கொள்ளவில்லை. ஆயினும் பொருள்களின் தன்மையைப் பற்றி தத்துவ ஞான தர்க்க மொன்று அவர் நாடகங்களில் காணத்தான் செய்கிறது. உலக இன்னல்களை விவரிக்கும் அவர் அவற்றிற்குரிய பரிகாரத்தையும் கண்டு சூசகமாகத் தெரிவிக்கிறார். அன்பு, இரக்கம் ஆகியவற்றின் மூலம் நம்மைத்தூய்மை செய்கிறார். நம்மை உருப்படுத்தும் சக்தி ஒன்று உளது. அதை இறைவனின் திருவுள்ளம் அல்லது விதி எனலாம். மனிதன் தன் தவறுகளுக்காகக் கழிவிரக்கங்கொண்டு தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ள முயன்றால், விதி இன்றியமையாது அவனுக்குத் துணை செய்கிறது. ஷேக்ஸ்பியர் இதனை உணர்ந்து குறிப்பாக ஆங்காங்கு தெரிவித்திருக்கிறார். உலகம் ஒரு புதிர். அதில் துன்பம் உளது. அருள் வடிவினனான இறைவன் இத் துன்பத்தை அனுமதிப்பதேன்? இப்புதிரையும் ஷேக்ஸ்பியர் தம் "புயற்காற்று" என்னும் இறுதி நாடகத்தில் விள்ளுகிறார். இறைவன் யாரிடம் மிகுந்த அன்பு காட்டுகிறானோ அவனிடமும் துன்பத்தை அனுப்புகிறான். அத்துன்பம் பக்தனுக்கு ஒரு சோதனையாகும். இறையருள் தாமதிக்கிறது. பக்தன் துன்பத்தினால் தூய்மையுற்று பரிபக்குவம் அடைந்த பிறகே ஆண்டவன் அருள் பொழிகிறது. ஆண்டவன் திட்டத்தில் துன்பத்துக்குப் பயன் உள்ள இடமுண்டு. மனிதனைச் சீர்திருத்துவமே அதன் நோக்கம்.

'லியர் மன்னன்'

இதைக் கருத்தில் கொண்டு "லியர் மன்னன்" நாடகத்தைச் சிறிது ஆராய்வோம். லியர் தன் அரசு, அதிகாரம், சொத்து ஆகியவற்றையும் தன் மக்களுக்கு அளித்து விட விரும்புகிறான். ஆனால் அதற்கு நிபந்தனை போடுகிறான். அந்த நிபந்தனையை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வதுபோல மூத்த புதல்விகள் இருவரும் பாசாங்கு செய்கின்றனர். கடைசிக் குட்டி ஒப்புக்கொள்ளவில்லை. லியர் அவளை விலக்கி விட்டு மற்றவர்களுக்கு அரசையும் சொத்தையும் விநியோகம் செய்கிறான். இந்தத் தானம் பொய்த் தானம். தகப்பன் தன் குழந்தைகளைத் தன் உடைமைகள் போலவே கருதுகிறான். உண்மையில் அவன் தனக்குத் தானேதான் தானம் செய்கிறான். இச்சகம் பேசி அரசையும் சொத்தையும் லியரிடமிருந்து பெற்றுக்கொண்ட மூத்த புதல்விகள் மன்னனின் இந்த உடைமையுணர்ச்சியை எதிர்த்து நிற்கின்றனர். தந்தையின் உடைமைகளை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அவனைப் பல கொடுமைகளுக்கும் அவமானத்திற்கும் ஆளாக்குகின்றனர். லியர் பெரிதும் சினமடைகிறான். தன்னையே காதலித்த அவன் தன் மீதே இரக்கம் கொள்ளுகிறான். புதல்விகள் இருவரும்

அவனைத் துரத்தி விடுகின்றனர். புகலிடம் இன்றிப் பித்தனாக அலைகிறான். இரவில் மழையும் இடியும் கோரத் தாண்டவம் புரிகின்றன. காற்று கடுமையாக அடிக்கிறது. அவற்றை எதிர்த்துச் செல்கிறான். "காற்றே இங்கிலவுலகைத் தூக்கிச் சென்று கடலில் எறிந்து விடு. கடலின் அலைகள் பொங்கி நிலத்தை விழுங்கி விடச் செய். நன்றி கெட்ட மானிடனின் உயிரை இருந்தவிடம் தெரியாமல் ஒழித்து விடு" என்று கத்துகிறான். அவன் சுய ஞானம் பெறுகிறான். துன்பத்தால் அழுந்தி விடாமல், தலை தூக்கி நிற்கிறான். தன்னைத் தேடி வந்த உண்மையான மகள் கார்திலியா சகோதரிகளின் வஞ்சகத்தால் சிறைப்பட்டு மடிகிறாள். கருவத்திலிருந்து விடுதலையடைந்து சுய ஞானம் பெற்ற மன்னன் துயர வேதனையில் உலகை நீத்தான். நாடகத்தின் இந்த இறுதிக் காட்சி உயர் கவிதையின் மணமாட்சிமையை அடைகிறது.

—"தினமணி"

புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி. B. A., L. T.,

Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

மானேஜர்,

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

அதிசயம்! ஆனால் உண்மை!

கென்னடியின் 4 கடிதங்களுக்கு ரூ. 45 ஆயிரம்

நியூயார்க், டிச. 19—காலஞ் சென்ற அதிபர் கென்னடி எழுதிய நான்கு கடிதங்கள் இங்கு சுமார் ரூ. 45 ஆயிரத்து 333க்கு விற்கப்பட்டன.

* * *

நெற்றிக்கண் குழந்தை!

தேவகோட்டை, டிச. 7 நெற்றிக் கண் உடைய ஒரு குழந்தை இங்கு ஒய்யம்மா என்ற 18 வயதுப் பெண்ணுக்குப் பிறந்தது.

இந்த அதிசயக் குழந்தைக்கு மூக்கு இல்லை. சுவாசத்திற்கு ரப்பர் குழாய் பொருத்தப்பட்டது. ஆனால் 6 மணி நேரம் வரைதான் அந்தக் குழந்தை உயிருடன் இருந்தது.

ஸ்தல நகர சபை ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் இந்தப் பிரசவம் நடந்தது.

* * *

ரூ. 13 லட்சம் பெறுமான வைரம்

லண்டன், டிச. 4—வெண்மையும் நீலமும் கலந்த ஒரு வைரம் இம்மாதம் லண்டன் சோதிபை கடையில் ஏலத்துக்கு விடப்படும் போது உலகிலேயே மிக அதிகமாக ரூ. 13 லட்சத்துக்கு விலை போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்விட்சர்லாந்திலுள்ள ஒருவருக்குச் சொந்தமான இந்த வைரம் முக்கால் அங்குல நீளமும் 30 காரட்டுக்கு அதிகமான எடையும் கொண்டதாகும்.

உலகில் இதற்கு முன்னர் மிக அதிகமான விலை கொடுக்கப்பட்ட வைரம் ரூ. 10 லட்சத்து 40 ஆயிரத்துக்கு விலை போயிற்று.

* * *

11 வார "இரவு" தொடங்கியது

ரோம், டிச. 15—வட இத்தாலியிலுள்ள கோமோ என்னுமிடத்துக்கருகிலிருக்கும் நான்கு ஊர்களில் 11 வார காலத்துக்கு நீடிக்கும் "இரவு" ஒரு வாரத்துக்கு முன்னர் தொடங்கி விட்டது.

ஆல்பஸ் மலையின் ஆழமான பள்ளத்தாக்குகளிலிருக்கும் அந்த ஊர்களின் மீது பனிக்காலச் சூரிய ஒளிபடாதவாறு உயர்ந்த மலைகள் தடுத்துக் கொள்கின்றன. பிப்ரவரி மாதக் கடைசி வரையில் அந்த ஊர் பகலவனைக் காணாமல் இரவில் இருந்து வரும்.

கார்களைக் கடலில் எறிகிறார்கள்!

ஸ்டாக்ஹோம், செப். 10—பழைய கார்களை என்ன செய்வது

என்று தவிக்கும் சுவீடன் நாட்ட வருக்கு ஒரு வழி பிறந்திருக் கிறது. சுமார் ரூ. 133 கட்டணம் செலுத்தினால் பழைய கார்கள் பால்டிக் கடலில் தூக்கி எறிந்து கழித்துக் கட்டப்படும்.

கார்களைக் கடலில் எறியும் பணியில் ஈடுபட இங்குள்ள கப்பல் நிறுவனமொன்றுக்கு சுவீடன் அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது.

கடல் 1200 அடி ஆழமுள்ளதாக இருக்கும் வெளி ஸ்டாக்ஹோம் தீவுக் கூட்டத்துக்கு அருகிலுள்ள பூனை ஒன்றிலிருந்து 21 கார்கள் வீதம் ஒரே நேரத்தில் கடலில் எறியப்படும்

*   *   *

இமயம் வளருகிறது!

புதுடில்லி, டிச. 12—நூறு வருடங்களுக்குச் சுமார் 1 மில்லி மீட்டர் (·0394 அங்குலம்) வீதம் இமயமலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தத் தகவலை இந்திய பூகர்ப்ப நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.

இது சுமாரான புள்ளி விவரமே.

ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு விதமாக இமயமலை வளர்ச்சியடைகிறது. சில காலங்களில் வளர்ச்சி அதிகமாகவும் மற்றும் சில காலங்களில் வளர்ச்சி குறைவாகவும் இருக்கிறதாம்.

காஷ்மீரில் உள்ள பிர்பஞ்சால் மலைச் சிகரம் மனிதன் தோன்றிய காலத்தில் 7,000 அடி உயரம் இருந்ததாகவும், அது 8,000 அடியாக வளர்ந்திருப்பதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

*   *   *

தீ கக்கிய மத குரு!

லண்டன், டிச. 11—"பலி பீடத்தில் உள்ள மெழுகுவர்த்தி தீபங்களை ஒரு மத குரு அணைத்த போதெல்லாம், அவருடைய மூச்சுக் காற்று தீப் பற்றிக் கொண்டது" என்று ஒரு சர்ஜன். பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகையில் தாம் கண்ட அதிசய அனுபவத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்.

மேற்கூறிய வைத்திய நிபுணர் மேலும் எழுதியிருப்பதாவது: மத குருவின் தொண்டையில் ஒரு புண் இருப்பதாகத் தெரியவந்தது. அந்தப் புண் காரணமாகத் தீப் பற்றக்கூடிய ஒரு கியாஸ் அந்த மதகுருவின் தொண்டையில் திரண்டது. அவர் நெருப்பையோ அல்லது தீபத்தையோ ஊதி அணைக்கும் போது, அவருடைய மூச்சுக் காற்றில் தீப் பற்றிக் கொண்டது. இவ்வாறு தீப் பற்றுவதற்கு அவருடைய தொண்டையில் சேர்ந்திருந்த கியாஸ் உதவியாக இருந்தது. ரண சிகிச்சைக்குப் பிறகு, மதகுரு தமது அலுவல்களைச் சகஜமாகச் செய்ய முடிந்தது.

*   *   *

விடுதலைக்கு வித்திட்ட

வீரர்கள்

(தாதாபாய் நௌரோஜி)

[எஸ். நடராஜன்]

"தொண்டு செய்யும் அடிமை—உனக்குச் சுதந்திர நினை "வோடா?" என்று ஒரு இந்தியனைப் பார்த்து ஆங்கிலேயன் கூறியதாகப் பாரதியார் பாடினார், ஆனால் இங்கிலாந்திலேயே அந்த நாட்டுப் பாராளு மன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, மக்கள் சபையில் இந்தியரின் குரலாக முழக்கமிட்ட பெரியவர், தாதாபாய் நௌரோஜி. 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி' உள்ள உலக சுதந்திர இயக்கத்திற்கு முன்னோடியாக இருந்தது இந்தியாவின் விடுதலை. அந்த விடுதலைக்கு வித்திட்ட வீரரின் வரலாற்றுக் குறிப்புகளை மேலே படியுங்கள்.

—ஆசிரியர்.

ஒரே ஒரு தொடர். அது அவருடைய வாயிலிருந்து வெளிப்பட்ட அளவில் புதையலை எடுக்கும் மந்திரம் கிடைத்தது போல, தேசபக்தர்கள் ஆனந்தம் அடைந்தார்கள். அதை வெளியிட்டவர் தாதாபாய் நௌரோஜி. 1906-ம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைத் தலைமையுரையில்நமக்குச்சுயராஜ்யம் வேண்டும் என்று சொன்னார்.

இந்தியா கோருவதெல்லாம் "சுயராஜ்யம்" என்று சுருங்கக்கூறி விளங்க வைத்தவர், அவர். காங்கிரஸ் மகாசபையைத் தோற்றுவித்த முக்கிய மானவர்களில் ஒருவர் என்பதுடன் மூன்று முறை அச்சபையின் அக்கிராசனராகவும் இருந்திருக்கிறார். பள்ளி ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்த இவர் வியாபாரத்துறையில் ஈடுபட்டு அதை நடத்துவது சம்பந்தமாக இங்கிலாந்து சென்றார்.

அக்காலத்தில் இந்தியாவைப் பற்றி ஆங்கிலேயர்கள் மிகவும் கீழ்த்தரமான அபிப்பிராயம் கொண்டிருந்தனர். இதைக்காண நௌரோஜிக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. லண்டனில் "இந்தியா சொசைட்டி" என்ற சங்கத்தை அமைத்து இந்தியர்கள் சிறந்த பண்பாட்டினையும் கலைத்திறனையும் பற்றிப் பிரசங்கங்கள் நிகழ்த்தினார். இவர் முயற்சி காரணமாக இந்தியாவைப்பற்றி தாங்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்களையும் மாற்றிக் கொள்ள ஆரம்பித்தனர்.

சிங்கத்தின் கூண்டுக்குள்...

சிங்கத்தின் பிடரிமயிரைப் பிடித்துக்குலுக்க அது இருக்கும் கூண்டுக்குள் செல்வது போல பிரிட்டன் இந்தியர்களுக்கு இழைக்கும் தவறுகளை எடுத்துக் காட்ட, பிரிட்டனின் பாராளு மன்றத் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றார். அவர் அபேட்சகராக நின்ற தொகுதியின் பெயர் "பிரின்ஸ்பரி". இவர் முதல் தடவை தோல்வியுற்றார். இரண்டாவது தடவை மூன்றே மூன்று ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதன் காரண மாகக் கிண்டல் செய்வதற்கா கவோ அல்லது உண்மையில் இவர் பெயரைச் சரிவர உச்சரிக் கத் தெரியவில்லையோ என்னவோ, பிரிட்டிஷ்காரர்கள் நௌரோஜி என்பதற்குப் பதில் "நேரோ மெஜாரிட்டி" என்றழைக்க ஆரம்பித்தனர். கறுப்பு நிறத்த வர் இனத்தைச் சேர்ந்த ஓர் இந்தியர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது வெள்ளையர் களுக்குப் பிடிக்கவில்லை. 1892-ல் இவர் காமன்ஸ் சபையில் அங்கத் தினராக நுழைந்தபோது லாலிஸ்பரி பிரபு "வெள்ளை யர் நடுவில் ஒரு கறுப்பர்" என் றார். இந்தத் துடுக்கான வார்த் தையைக் கேட்டதும் நௌரோஜி யின் காரியதரிசி திருமதி காமா வுக்குப் பொறுக்கவில்லை. அங் கேயே ஒரு கூட்டம் போட்டு அவ் வெள்ளையரைக் கண்டித்த துடன், அவரை மன்னிப்புக் கோரும்படியும் செய்தார்.

இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுகளைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட "பாஸட்" கமிட்டி முன்பு இவர் புள்ளி விவ ரங்கள் மூலம் இந்தியர்களின் சராசரி வருமானம் ரூ. 20-க்கு மேல் இல்லை என்றும் ஆனால் வரிப்பளுவோ ரூ. 3-க்கு மேல் ஆகிறது என்றும் விளக்கினார். இந்தியாவில் வைஸ்ராய் நிர்வாக சபையில் நிதி அங்கத்தினராக இருந்த ஸர் எல்வின் பேரிங், நௌரோஜி குறிப்பிடுவது உண் மைதான் என்பதை ஒப்புக் கொண்டார். இதனால் நௌரோ ஜியின் புகழ் மேலும் அதிகரித் தது.

சம்மதத்தின்பேரில் வரி விதிக்க வேண்டும் என்ற அடிப்படை நியதி எல்லா பிரிட்டிஷாருக்கும் தெரிந்ததே. ஆனால் அதை இந் தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் பின்பற்றவில்லை. இதை எடுத்துக் காட்டிக் கண்டித்தவர் நௌ ரோஜி.

அரசியல் வேறே ஒழுக்கம் வேறே என்று கருதுகிறவர்கள் இரண்டையும் அறியாதவர்கள்.

—ரூஸோ

எவனொருவன் தன்னுடைய செல்வத்தைக் கொண்டு ஓய்வு, சுதந்திரம், ஆரோக்கிய திடகாத்திரம் ஆகிய மூன்றையும் பெறுகிறானோ அவன்தான் உண்மையான பணக் காரன்.

—ரூஸோ

முன்பெல்லாம் ஐ. ஸி. எஸ். பரீட்சை இங்கிலாந்தில் மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. இங்கி லாந்திலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் நடத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்து பிரிட் டிஷ் பாராளுமன்றத்தில் மெஜா ரிட்டி ஆதரவைப்பெற்று இதற்கு ஒப்புக்கொள்ளும்படி செய்தார்.

பலாத்காரம் பலனளிக்காது

காங்கிரஸ் மகா சபையின் முதல் மகாநாட்டில் இவர் கலந்து கொண்டார். கல்கத்தாவில் நடை பெற்ற இரண்டாவது மகாநாட் டிற்கு இவரே அக்கிராசனர். லாகூரில் நடைபெற்ற ஒன்பதா வது மகாநாட்டிற்கும் இவரே தலைமை தாங்கினார். அப்போது அவருடைய செல்வாக்கு உச்ச நிலையில் இருந்தது.

இவர் பிரிட்டனிலிருந்தபோது இவருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் பெற்று காந்திஜி லண்டனுக்குப் பயணமானார். பலாத்காரம் பல னளிக்காது என்றபடிப்பினையைக் காந்திஜி கற்றது நௌரோஜியிட மிருந்துதான். தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னையைத் தீர்ப்பதில் காந்திஜிக்கு இங்கிலாந்திலிருந்த படியே இவர் பேருதவியாக இருந் தார்.

பலவேறு நிதிக் கமிஷன்கள் முன்பு சாட்சியம் தந்து ஏகாதி பத்திய நலன்களைக் காப்பாற்றிக் கொள்ள ஏழை இந்தியாவின் எல்லைக்கப்பால் பிரிட்டனால் செலவு செய்யப் படுவதைச் சுட் டிக் காட்டினார். 1882-ம் ஆண்டு முதல் "1891-ம் ஆண்டு வரை இவ் வாறு ரூ. 139 கோடி விரயமாகி யிருக்கிறதே" என்பதை எடுத் துக் காட்டினார்.

இந்தியாவைப் பிரிட்டன் ஆண்டுவந்தபோது ஏற்பட்ட பஞ் சங்களுக்குக் காரணம் உணவுப் பற்றாக் குறையல்ல. பணப்பஞ் சம் தான். அரசாங்கத்தின் பிரிட்டிஷ் அதிகாரிகளுடைய சம்பளங்கள், பென்ஷன்கள் என்ற இரு தலைப்புக்களில் இந்தி யாவிலிருந்து வருடத்திற்கு ரூ. 20 கோடி பிரிட்டனுக்குப் போய்க்கொண்டிருந்தது. அதே பணம் பிரிட்டிஷ் மூலதனம் என்ற பெயரில் இந்தியாவில் முத லீடு செய்யப்பட்டது. இதன் விளைவாகவே இந்தியர் வறுமை யில் வாட நேர்ந்தது. இதை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தி லேயே துணிந்து எடுத்துக்கூறிய வர் நௌரோஜி.

இந்தியாவிற்குத் திரும்பி வந்து 1878-ல் பரோடா சமஸ்தானத் தில் திவானாகச் சில காலம் பதவி வகித்தார். பெண் கல்விக்காக இவர் பெரிதும் பாடு பட்டார். இதில் இவர் அபார சிரத்தை காட்டியதற்குக் காரணம் இவ ருக்கு எழுதப் படிக்கத் தெரி யாத ஒரு பட்டிக்காட்டு மனைவி வாய்த்ததுதான். நௌரோஜிக்கு இந்தியா விஷயத்தில் இருந்த ஆர்வமும் சிரத்தையும் அவரை அத்துடன் விட்டுவிட வில்லை.

(47-ம் பக்கம் பார்க்க)

விழுந்த மழைத்துளியை வீணாக்காமல் பேணும் வழிகள்

நிலவளமும் நீர் வளமும் போதிய வெயிலும் இருந்தால் பயிர் வளம் கொழிக்கும். மழை வளம் இல்லாவிட்டால், பாசனக் கால்வாய்கள் இன்றியமையாதவை ஆகின்றன.

அமெரிக்காவில் அரிசோனு மாநிலத்தில் டெம்பே என்னும் நகரில் நீர்வளப் பாதுகாப்பு ஆய்வுக் கூடம் ஒன்று இருக்கிறது. அமெரிக்க விவசாய இலாகாவைச் சேர்ந்தது அது. அங்கு இதே போன்ற இன்னொரு பிரச்னையைப்பற்றி ஆராய்கிறார்கள். போதிய தண்ணீர் வசதி இல்லாததால் கால் நடைகளுக்கு ஏற்ற மேய்ச்சல் நிலமாக்க முடியாமல் இருக்கும் வறண்ட காடுகளின் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்பதுதான் இந்த ஆய்வுக்கூடத்தாரின் கவலை. அப் பிரதேசங்களுக்குப் பாசனக் கால்வாய்கள் வெட்டவும் வழியில்லை.

ஆண்டுக்கு 10 அங்குலமே மழை பெய்யும் வறண்ட காடுகளில் ஆயிரம் காலனுக்கு ரூ. 1–80 விதமும் 20 அங்குலம் மழைபெய்யும்இடங்களில் 90நயா பைசா வீதமும் கால்நடைகளுக்குத் தண்ணீர் கிடைக்க வகை செய்வது எப்படி என்பது இப்பொழுது இந்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியாகும்.

வானின்று விழுந்த துளியை மண் உறிஞ்சி விடாதபடி தடுக்க வேண்டும் என்பதுதான் ஆராய்ச்சியின் நோக்கம்; அதற்காக மண்ணைத் தக்க முறையில் பக்குவப்படுத்தவேண்டும். அப்பொழுது மழை நீர் மண்ணில் மறையாமல் அதிகமாகச் சேர்ந்து பள்ளத்தை நோக்கி ஓடும்; அதை அணை கட்டித் தேக்கலாம். குளம் வெட்டிப் பெருக்கலாம். அல்லது பியூட்டில் என்ற ரசாயனப் பொருள் பூசிய நைலான் பைகளில் பிடித்து அடைத்து வைக்கலாம்.

பயிர் விளைச்சலுக்காவது ஆடு மாடுகள் மேய்வதற்காவது காட்டு மிருகங்களுக்காவது பயனில்லாத நிலத்தை இவ்வாறு பக்குவப்படுத்தி மழை நீரைத் தேக்கி வைக்கலாம்.

கண்ணுக்குத் தெரியாத சிறு துற்றலும் வீணாகாதவாறுமழைத் துளியைச் சேர்ப்பதற்குச் செயற்கை ரப்பர்த் துணியும், தார் பூசிய சணல் துணியும் மிகவும் சிறந்தன என்று முதலில் அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டார்கள்.

ஆனல் இந்தத் துணிகளை விட மலிவான பொருள்களைப் பயன்படுத்த வேண்டும் என்று உணர்ந்த அவ்விஞ்ஞானிகள், மழை நீரை

உறிஞ்சாதபடி மண்ணைக் கட்டிப் படுத்தக்கூடிய பொருள்களைத் தேட ஆரம்பித்தார்கள். முதலில், எதிர் மின் ஏற்றமுள்ள தார்ப் பசைக் குழம்பை வைத்து அவர்கள் மண்ணைப் பக்குவப்படுத்திப் பார்த்தார்கள். பெரும்பாலான மண்ணின் மேற் பரப்பு எதிர்மின் ஏற்ற முள்ளதாக இருக்கும்; எனவே அந்தப் பசைக் குழம்பு மண்ணோடு ஒட்டவில்லை.

ஆகவே அவர்கள் நேர் மின் ஏற்றமுள்ள தார்ப் பசைக் குழம்பைக் கொண்டு மண்ணைப் பக்குவப்படுத்தலானார்கள். இப் பசைக் குழம்பு மண்ணின் மேற்பரப் போடு மிகவும் விரைவாகப் பற்றிக் கொண்டுவிட்டது. இதனால், பசைக் குழம்பு தரைக்குள் சென்று தடித்த அரண் அமைக்க முடியவில்லை. எனவே, பசைக் குழம்பு அரை அங்குல ஆழமாவது மண்ணுக்குள் இறங்கும் வரை அது மண்ணோடு சேர்ந்து கட்டியாகாதபடி செய்யும் முறையைக் கண்டுபிடித்தார்கள்.

அலுமினியச் சீவல், செயற்கை ரப்பர், மெல்லிய பிளாஸ்டிக் துணி இவற்றோடும் நேர்மின் ஏற்றத் தார்ப்பசைக் குழம்பு நன்கு சேர்ந்து இறுகுகிறது என்றும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் ஆராய்ச்சிக்கு இது இன்னும் சிறந்த உதவியாகும்.

விண்ணினின்று விழும்மழைத் துளிகளில் ஒன்றுகூட மண்ணுள் மறைந்து விடாதவாறு தடுத்துச் சேர்த்து வைக்க விஞ்ஞானிகள் இவ்வாறு சோதனைகள் நடத்தி வருகிறார்கள்.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.

மூன்று காலம்

"திருச்சி வானொலி நிலையத்தில் பேசவிருந்த புதுமைப்பித்தன் அதற்கு முன்பே காலமாகிவிட்டால்?" என்ற கேள்வியை அவரே எழுப்பிக்கொண்டு, அப்போது தம் எதிரிகள் எப்படிக் கும்மாளம் அடிப்பார்கள்? 'பய, போய்த் தொலைஞ்சானா?' என்று எவ்வளவு நிம்மதியுடன் மூச்சுவிடுவார்கள்? புதுமைப்பித்தனின் மிதியடி ஓசையைக் காலனின் அடியோசையாகக் கேட்டுத் திகிலடைந்த இலக்கியப் போலிகள் எப்படி ஆனந்தக் கூத்தாடுவார்கள்?' என்பதையெல்லாம் கற்பித்துக்கொண்டு, அந்த வேளையில் புதுமைப்பித்தனின் நண்பர் ஒருவர் இந்தப் போலிகளின் கூத்தைக் கண்டு வயிறெரிந்து, அவர்களைப் பார்த்துப் பாடுவதாக, புதுமைப்பித்தனே ஒரு பாட்டுப் பாடிவிட்டுச் சென்றார்.

திருச்சிக்கு என்றான்; தென்திசைக்கே சென்றுவிட்டான்
கிரிச்சிச் சடாச்சத்தம் கேட்டாயோ?—உரிச்சி
வச்சமடையா வக்குஅத்த மடையா! எச்சிற்
காசு மடையா போடா!

—ரகுநாதன்

'ஸான்டா கிளாஸ்'

ஜனார்த்தனன்

புனித பூமி என்று அழைக்கப்படும் பாலஸ்தீனத்திலுள்ள "பெத்லஹெம்" (Bethlehem) என்ற ஊரிலுள்ள ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, "உலகத்திற்கு ஒளி"யாக விளங்கிய ஏசுநாதரின் பிறந்த நாள் விழாவை கிறிஸ்துமஸ் பண்டிகையாக கிறிஸ்தவ உலகம் கொண்டாடுகிறது. பட்டாசுக் கட்டுகளேயும், பட்டாடைகளேயும் தங்கள் தியானத்தில் வைத்து உறங்கும் குழந்தைகளேப் பரவசப்படுத்தும் தீபாவளிப் பண்டிகைபோன்று, கிறிஸ்துமஸ் பண்டிகையும் குழந்தைகளே ஆனந்தத்தில் ஆழ்த்தி வைக்கிறது. இதற்குக் காரணம், புராணக் கதைகளிலிருந்து உருவகமான "ஸான்டாகிளாஸ்" (Santaclaus) என்னும் ஒரு படைப்புதான். அலங்கரிக்கப்பட்டிருக்கும், கிறிஸ்துமஸ் மரத்தின் கீழ், குழந்தைகளால் தொங்கவிடப்பட்டிருக்கும் காலுறைகள் (Stockings) நிரம்பும்படி விளேயாட்டுச் சாமான்கள், பழங்கள், மிட்டாய்கள், மற்றும் பலவிதப் பரிசுகளே வாரியிறைத்துச் செல்லும் "ஸான்டா கிளாஸ்" பிறந்த கதை மிகப் பழமையானது.

3—வது நூற்றாண்டில் பிறந்த "ஸெயின்ட் நிக்கோலாஸ்" (St. Nicholas) என்ற ஒரு பாதிரியே "ஸான்டாகிளாஸ்" என்று இந்நாளில் அழைக்கப்படுகிறார். நிக்கோலாஸ் பண்டைக் காலத்து ஆசியாமைனர் பிரதேசத்திலுள்ள லிசியா (Lycia) நாட்டின் "பட்ரஸ்'. (Patras) என்ற ஊரில், செல்வந்தரான பாதிரி ஒருவருக்குப் புத்திரனுகப் பிறந்தார். இளம் பிராயத்திலேயே சாதாரண குழந்தைகளேப் போலில்லாமல், வாரத்தில் இரண்டு தினங்கள் மட்டும் உணவு கொள்வது நிக்கோலாஸின் வழக்கம். மேலும், பாடப் புத்தகங்களிலும், உலக ஆசைகளிலும் பற்றுதல் இல்லாமல், வேத நூல்களேப் படித்து ஆராய்வதில் நிக்கோலாஸ் ஊக்கம் உள்ளவராக இருந்து வந்தார்.

அவருடைய பெற்றோர்கள் காலமானபின், நிக்கோலாஸ், எளிய வாழ்க்கைக்கு உதவாத தன் சொத்துக்களே, தகுதியுள்ள ஏழை மக்களுக்கு அளிப்பதில் செலவிட்டார். ஒரு சமயம் தன் மூன்று குமாரிகளே மணம் செய்துகொடுப்பதற்குப் பொருள் வசதியில்லாத பரம ஏழை ஒருவன், அப் பெண்களே அடிமைகளாக விற்க முற்பட்டான். இதைக் கேள்விப்பட்ட நிக்கோலாஸ், அந்த ஏழையின் வீட்டிற்கு ரகசியமாக நள்ளிரவில் சென்று, தங்கக் காசுகள் நிறைந்த ஒரு பையை ஜன்னலில் வைத்து விட்டு வந்தார். இச்சம்பவத்தி

லிருந்து, நிக்கோலாஸை வழிபடும் பெண்கள் நல்ல கணவர்களை அடைந்து இன்ப வாழ்க்கை நடத்துவார்கள் என்ற நம்பிக்கை பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

பின்னர் பக்தி நிறைந்த நிக்கோலாஸ், ஏசுநாதர் பிறந்த புண்ணிய ஸ்தலத்திற்கு விஜயம் செய்ய முற்பட்டார். அவர் பிரயாணம் செய்த கப்பல் நடுக் கடலில் கடும் புயலில் அகப்பட்டுக் கொள்ளவே அதன் மாலுமிகள் மனம் கலங்கினர். ஆனால், தயங்காத நிக்கோலாஸ், கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்யவும், புயல் நின்று அமைதி நிலவியது. மற்றொரு சமயம், பாய்மரத்தின் உயரே பழுதுபார்த்துக்கொண்டிருந்த மாலுமி ஒருவன் கால் தவறி விழுந்து இறந்தான். இதைக் கண்ட நிக்கோலாஸ் விரைந்து சென்று தன் பிரார்த்தனையின் சக்தியால் அவனை மறுபடி உயிர் பெறச் செய்தார். கடைசியாக, புண்ணிய பூமியை அடைந்ததும் அங்குள்ள மாதா கோயிலின் கதவு தானாகவே திறந்து கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன. பின்னர் ஆண்டவனின் கட்டளைப்படி லிசியா நாட்டிலுள்ள மைரா (Myra) நகரத்திற்குச் சென்ற நிக்கோலாஸ், அந்நகரத்தின் பிரதான குரு (Archbishop) பதவியை ஏற்றுக்கொண்டார்.

கோவிலின் ஆலோசனை சபைகளில் (Councils of the Church) அங்கம் வகித்து பிரசித்தி பெற்ற நிக்கோலாஸ் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது, குழந்தைகளுக்குப் பரிசுகள் அளித்து வந்தார்.

கி. பி. 343–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6–ஆம் தேதி விண்ணுலகு எய்திய திரு. நிக்கோலாஸின் உடலை அபூலியா (Apulia) என்ற நாட்டிலுள்ள பாரி (Bari) என்ற நகரத்தைச் சேர்ந்த மக்கள், கி. பி. 1087-ஆம் ஆண்டு தந்திரமாக அகற்றிச் சென்று, தம் நகரில் அடக்கம் செய்தனர். அவரது ஞாபகார்த்தமாக, அவ்விடத்தில் ஒரு மண்டபமும் நிறுவப்பட்டது. அன்று முதல் நிக்கோலாஸ் "ஸெயின்ட்", அதாவது–"புண்ணிய புருஷர்" (Saint) என்று அழைக்கப்படுகிறார். அவருக்கென்று பல இடங்களில் கோவில்கள் கட்டப்பட்டன.

இவ்வாறு புகழுடன் விளங்கிய நிக்கோலாஸை முதன் முதலில் நெதர்லாந்து தேசத்து மக்கள் குழந்தைகளின் தெய்வமாக வழிபடலானார்கள். கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது நிக்கோலாஸ் நரைத்த தாடியுடன் சிவப்பும் வெள்ளையும் கலந்த ஆடை தரித்து எட்டு கலைமான்கள் பூட்டிய விளையாட்டு சாமான்கள் நிறைந்த "ஸ்லெட்ஜ்" என்னும் சக்கரமில்லாத வண்டியில் ஆகாய மார்க்கமாக வந்து, தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட வீடுகளில் புகைபோக்கியின்வழியே இறங்கி,

அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும் காலுறைகளில் பரிசுகளை நிரப்பிவிட்டுச் செல்வதாகக் கதைகள் கூறுகின்றன. நிக்கோலாஸுக்கு, தம் வீட்டின் அடையாளம் தெரிவதற்காக, குழந்தைகள் வீட்டுஜன்னல்களில்மெழுகுவர்த்திகளைஏற்றிவைப்பது இன்றைக்கும் பழக்கத்தில் இருந்து வருகிறது. பண்டிகையன்று நள்ளிரவில் ஏசுநாதரின் பிறப்பை அறிவிக்கும் மாதா கோவில்களின் மணிகள், குழந்தைகளுக்கு நிக்கோலாஸின் வருகையை அறிவிப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு, குழந்தைகளின் தெய்வமாக விளங்கிய "ஸெயின்ட் நிக்கோலா"ஸின் பெயர் திரிந்து நாளடைவில் "ஸான்டா கிளாஸா"க மாறியது.

கிறிஸ்துமஸ் பண்டிகையன்று வீட்டிலுள்ள ஒருவர் "ஸான்டா கிளாஸ்" வேடம் தரித்து குழந்தைகளுக்குப் பரிசுகளை அளித்துச் செல்வது இன்றைக்கும்நடைமுறையில் இருந்து வரும் ஒரு பழக்கமாகும். இவ்வாறு தமக்குக் கிடைக்கும் பரிசுகளை "ஸான்டா கிளாஸ்" அளித்ததாக எண்ணி மகிழும் குழந்தைகள், தாம் பெரியவர்களாக ஆகும் பொழுது, தன் அன்பிற்குரிய பெற்றோர்களும், உறவினர்களும் சிநேகிதர்களும் தான், "ஸன்டா கிளாஸாக" இருக்கிறார்கள் என்பதை அறிந்து மேலும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

முதன்முதலில் நிக்கோலாஸ் மறைந்த தினமான டிசம்பர் மாதம் 6—ஆம் தேதி கொண்டாடப்பட்டு வந்த இப்பழக்கம், நாளடைவில் கிறிஸ்துமஸ் பண்டிகையுடன் கலந்து கொண்டாடப்பட்டு வரலாயிற்று. இப்பண்டிகையை, பல தேசங்கள், குழந்தைகளின் தினமாகக் கொண்டாடி வருகின்றன. பௌத்தர்கள் நிறைந்த ஜப்பான் தேசத்தில் இப்பண்டிகை கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது என்றால் "புண்ணிய புருஷர் நிக்கோலாஸின்" புகழ் எப்படிப் பட்டது என்பது தெரியவருகிறதல்லவா!

—"தினமணிச் சுடர்"

எல்லா மனிதர்களும் பிறக்கிறபோது சமமாகவே பிறக்கிறார்கள். அப்படிப் பிறக்கிறபோதே சிருஷ்டி கர்த்தரான கடவுள், அவர்களுக்குப் பிறரிடம் பாராதீனப்படுத்த முடியாத உரிமைகளை அளிக்கிறார். இந்த உரிமைகளில், உயிர் வாழ்தல், சுதந்திரமாயிருத்தல், சந்தோஷகரமான வாழ்க்கையை நாடிச் செல்லுதல் ஆகியவை சேர்ந்திருக்கின்றன.

—ரூஸோ.

இந்தியாவில் கிறிஸ்தவச் சின்னங்கள்

"சரித்திரகன்"

ஹிந்து, பௌத்த, இஸ்லாமிய சமயப் பண்பாடுகளுக்குச் சம்பந்தப்பட்ட சின்னங்கள் மட்டுமே இந்தியாவின் தேசியப் பாரம்பரைச் செல்வங்கள் என்று சாதாரணமாக நினைப்பதுண்டு. ஆனால் இந்தப் பரந்த பாரத கண்டத்தில் வெவ்வேறு மூலைகளில் மிகப் புராதனமான, சரித்திரப் புகழ் பெற்ற பல கிறிஸ்தவச் சின்னங்களும் இருக்கின்றன என்பது பலருக்குத்தெரியாது. ஐரோப்பாவில் கிறிஸ்தவ நாடுகளிலுள்ள புராதனச் சின்னங்களுக்குச் சமமான முக்கியத்வமும் புனிதத் தன்மையும் வாய்ந்த இச் சின்னங்களில் சிலவற்றைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இவற்றில் மிகப் புனிதமான செல்வம் சாது ஃப்ரான்ஸிஸ் ஜேவியரின் திவ்விய உடல். இது நன்கு பாதுகாக்கப்பட்டு மேற்கு இந்தியப் பகுதியில் உள்ள கோவா நகரத்தில் பாம் ஜீஸஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு வந்த பல கிறிஸ்தவப் பாதிரிகளுள் சாது ஃப்ரான்ஸிஸ் ஜேவியர் மிகப் புகழ் பெற்றவர். இந்தியாவில் மதப் பிரச்சார வேலைகள் முடிந்ததும் தூரக் கிழக்குப் பிராந்தியங்களுக்கு இவர் சென்று, சீனாவின் தெற்குக் கரை சமீபத்திலுள்ள ஸான்ஸின் தீவில் தமது நாற்பத்தாறுவது வயதில் உயிர் நீத்தார். அவருடைய உடல் தாளிக்காத சுண்ணாம்புக் கற்கள் பரப்பப்பட்ட சாதாரண சவப் பெட்டி ஒன்றில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. சுண்ணாம்புக் கற்கள் அவருடைய உடலை ஜீரணித்த பின் எலும்புக்கூட்டைப் பத்திரமாகக் கோவாவுக்கு எடுத்துச் சென்று இறுதியாக அடக்கம் செய்ய வேண்டும் என்பது ஏற்பாடு. இரண்டு வாரங்கள் கழித்து அவருடைய சீன சிஷ்யர்கள் சவப் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். சுண்ணாம்புக் கற்களால் உடம்பு எந்தவிதச் சேதமும் அடையாமல் வைத்தது வைத்தபடி இருந்தது. சுண்ணாம்பு வாசனை மட்டும் வீசிக்கொண்டிருந்தது. பின்னர் இது மலாக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப் பட்டது. ஆனால் சவக் குழி மிகக் குறுகலாக இருந்ததால் சடலத்தைக் கீழே இறக்கும்போது உடலுக்குச் சிறிது சேதம் ஏற்பட்டது. இங்கிலையில் சுமார் ஐந்து மாதங்கள் அது இருந்தது. இறுதியாக 1554—ஆம் ஆண்டு மார்ச் 15—ஆம் தேதி இது கோவா நகரத்துக்குக்

கொண்டு வரப்பட்டது. அங்கே போர்ச்சுகீஸிய வைசிராயின் உத்தரவுப்படி வைத்திய நிபுணர்கள் சடலத்தைப் பரிசோதித்துப் பார்த்து, சடலத்தில் எவ்வித மாறுதலோ, வற்றலோ தென்படவில்லை என்று ஊர்ஜிதம் செய்தனர். சடலம் தேவாலயத்தில் உகந்த மரியாதைகளுடன் வைக்கப்பட்டது.

1554-ம் ஆண்டு பக்தி மிகுந்த இஸாபெல் டி கார்ம் (Isabelle de Corm) என்ற போர்ச்சுகீசிய சீமாட்டி தொழுகைக்கு வந்த ஒரு சமயம் ஜேவியர் சடலத்துக் காலின் சிறு விரலைக் கடித்து எடுத்துச் சென்று புனித சின்னமாகத் தன்னிடம் வைத்துக் கொண்டுவிட்டாள். இச்சம்பவத்துக்குப் பின் இப் புனித உடல் கண்ணாடி மூடியிட்ட ஒரு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டு, மூன்று பூட்டுகள் பூட்டிப் பாதுகாக்கப்பட்டது. யாரும் இதைத் தொடக்கூடாது என்று கடுமையான ஏற்பாடும் செய்யப்பட்டது. முன்னர் எடுத்துச் செல்லப்பட்ட கால் விரலின் ஒரு பகுதி 1557ம் ஆண்டில் ஜெஸ்யூவிட் பாதிரிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. மற்றொரு பகுதி அந்தப் போர்ச்சுகீஸிய சீமாட்டியின் வாரிசுகளுக்குக் குடும்பச் சொத்தாகப் போய்ச் சேர்ந்தது. 1622-ம் ஆண்டு, அதாவது சாது ஜேவியர் மரித்த எழுபது ஆண்டுகளுக்குப் பின்னர் அப்போதைய போப் ஆண்டவர் ஐந்தாவது பால் அவர்களின் ஆணைப்படி, பிரான்ஸிஸ் ஜேவியர் பூஜைக்குரிய தேவதையென மதிக்கப் பெற்று, சடலத்தின் வலது கரத்தைத் துண்டித்து ரோமாபுரிக்குப் புனித சின்னமாக எடுத்துச் செல்லப்பட்டது. 1949ம் ஆண்டு நவாத்தினங்களால் இழைக்கப்பட்டு இவ்வலது கரம், ரோமாபுரியிலிருந்து ஜப்பானுக்கு பிரான்ஸிஸ் ஜேவியரது ஜப்பான் யாத்திரையின் 400வது வருஷ விழாவுக்காக எடுத்துச் செல்லப்பட்டு, பின்பு இந்தியா வழியாகத் திரும்பி ரோம் நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கோவாவில் பாம் ஜீஸஸ் ஆலயத்தில் சடலம் வைக்கப்பட்ட நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர், பீர்ஜோஸப் ஸைமன் ரவார்ட் என்ற பிரஞ்சு பாதிரியும் எஸ்பியோனேலா என்ற மதகுருவும் சடலத்தை மறுமுறை பரிசோதனை செய்து அதில் உலர்ந்து போகும் அறிகுறிகள் ஏதும் காணப்படவில்லை என்று ஊர்ஜிதம் செய்தனர். ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின்னர் மாதா கோவிலுக்கு வந்த யாத்ரிகர்கள் சிலர் சடலத்தில் 'கருமை ஏறிக் கொண்டு வற்றல் நிலை தோன்றுகிறது' என்று அபிப்பிராயப்பட்டனர். இந்த மாற்றம் சென்ற 250 ஆண்டுகளாகச் சிறிது சிறிதாக நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்திய போலீஸ் நடவடிக்கையின்போது, இந்தப் புராதனச்

சின்னத்தைப் போர்ச்சுகீஸியர் லிஸ்பன் நகரத்துக்கு எடுத்துச் செல்லக்கூடும் என்ற பீதி பரவலாக இருந்தது. ஆனால் சாது ஜேவியர் கோவாவிலேயேதான் நிரந்தரமாக இருக்க விரும்பினார் என்ற ஐதிகம் வேரூன்றி இருந்தமையால், தங்களுக்குத் தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பின்னரும், இச்சின்னத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைப் போர்த்துகீஸியர் கைவிட்டனர். சாது ஜேவியரின் சடலத்துக்கு அமானுஷ்யமான சக்திகள் உண்டு என்று திடமாக நம்புபவர்கள் பலர் இருக்கின்றனர். பல அற்புதங்கள் அதன் மூலம் நிகழ்கின்றன என்றும் நம்பப்படுகின்றன. கோவா நடவடிக்கையில் உயிர்ச்சேதம் குறைவாக இருந்ததற்குக்கூட இப்புனித உடல்தான் காரணம் எனக் கருதுவோரும் உண்டு.

வட இந்தியாவிலும் கிறிஸ்துவ மத சம்பந்தப்பட்ட சில புராதனச் சின்னங்கள் உள்ளன. ஆக்ராவுக்கு அருகில் உள்ள ஃபதேபூர் சிக்ரியில், மொகலாய சக்கரவர்த்தி அக்பர் தமது கோட்டைச் சுவர்களில் விவிலிய வேதத்திலிருந்து பல காட்சிகளை ஓவியர்களைக் கொண்டு சித்திரித்துள்ளார் என்று கூறப்படுகிறது. இவற்றைப் பல நூற்றாண்டுகளாகக் கவனிக்காது விட்டபடியால் சேதமானது போக எஞ்சியுள்ளதை இன்றும் அங்கே காணலாம். அக்பரின் ராணிகளில் ஒருத்தியான மிரியமின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பெற்ற மிரியம் — உஜ்ஜமானி என்ற அரண்மனையில் ஒரு சித்திரத்தில் தேவ தூதன் மேரி மாதாவுக்கு இயேசுநாதரின் அவதாரத்தை அறிவிக்கும் காட்சி வரையப்பட்டுள்ளது. தேவதூதனின் இறக்கைகள் மட்டுமே இப்போது அதில் காணப்படுகின்றன.

இச் சித்திரங்களைவிட சாசுவதமானவை பூலந்தர்வாஜாவின் 176 அடி உயரமுள்ள விஜயஸ்தம்பத்தில் பொறிக்கப்பட்டுள்ள பல விவிலிய வாசகங்கள். இவை அக்பருடைய ஆணையால் ஆக்கப்பட்டவை. அவற்றில் ஒரு வாசகம், "ஈசா-(இயேசு) அவர் மீது சாந்தி நிலவுக—சொல்லுகிறார்: 'இவ்வுலகம் ஒரு பாலம்.' இப்பாலத்தின் மீது நீ நடந்து செல்; ஆனால் மனை, வீடு ஒன்றும் கட்டாதே. உலகம் நிலைத்திருப்பது ஒரு மணி நேரம்தான். இக்காலத்தைப் பக்தி செலுத்தியே கழி." பிற மத வாசகங்களைத் தமது வெற்றிக் கம்பத்தில் எழுத வேண்டுமானால் அந்த முகலாய சக்கரவர்த்தியின் மனப்பான்மை எவ்வளவு விரிந்தது என்பதை நன்கு உணரலாம்.

ஆக்ராவில் அக்பர் காலத்தில் பதினாறாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட பழைய கத்தோலிக்க மாதா கோவிலில் ஒரு பளிங்குச் சிலை இருக்கிறது. பெண் வடிவம். மேல்நாட்டு முறைப்படி காலில் பாத அணியுடன் கைகள் இரண்டையும் அஞ்சலி செய்யும் அமைப்பு. நின்று கொண்டு

தியானத்தில் இருக்கும் பாவம். இது மேரி மாதாவின் சிலை வடிவம் என்று அங்கே கருதப்படுகிறது.

இவற்றைத் தவிர முன்னாள் சமஸ்தான மன்னர்களான உதயபுரி மகாராஜா, ராமாபுரி ராஜா இவர்களுடைய சேமிப்புச் செல்வங்களில் விவிலிய வேதத்திலிருந்து வரையப்பட்ட பல அற்புதமான ஓவியங்கள் இருக்கின்றன.

கிழக்கிந்தியப் பிராந்தியத்தில் கல்கத்தாவின் அருகில் உள்ள ஸெராம்பூரின் டேனிஷ் பிரசார ஸ்தலத்தில், காரே (Carey) தொகுத்த பைபிளின் பதிப்பும், மார்ஷ்மன் எழுதிய நாற்பது மொழி பெயர்ப்புக்களும் இன்றும் இருக்கின்றன. கிறிஸ்துவ சமய சம்பந்தமான பல ஏடுகள் பாலி மொழியிலும், திபேத்திய பாரசீக மொழியிலும் உள்ளன. இவ்வேடுகளில் இயேசுநாதரின் வாழ்க்கை வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. அக்பர் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி ஜெரோம் ஜேவியர் என்ற பாதிரி இதற்கு உதவி செய்ததாகச் சொல்லப்படுகிறது.

தென்னிந்தியாவில் முக்கியமாகச் சென்னைக்கும் அதற்குத் தெற்கேயும்தான் மிக அதிகமான கிறிஸ்துவக் கோயில்களும் புனித ஸ்தலங்களும் பரவிக் கிடக்கின்றன. இதற்கு ஒரு காரணம் சுமார் 1900 ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் கிறிஸ்துவர்கள் இருந்ததுதான். பிறகாலங்களில்கூட "பிராடெஸ்டென்ட்" கிறிஸ்துவர்களும் இப்பகுதியில் விசேஷ கவனம் செலுத்தினர். சென்னையில் இயேசுநாதரின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான சாது தாமஸின் சின்னங்கள் இருக்கின்றன. கோவாவில் சாது ஜேவியர் எப்படியோ, அப்படித்தான் சென்னையில் சாது தாமஸும். ஆனால் தாமஸ் சின்னங்கள் ஜேவியர் சின்னத்தை விடக் காலத்தில் 1500 ஆண்டுகள் முந்தியன. இச்சின்னங்கள் சென்னையில் சாது தாமஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சாது தாமஸ் கி. பி. 52ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தார். மயிலாப்பூரில் கி. பி. 68ம் ஆண்டில் கொல்லப்பட்டு இறந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருடைய உடல், அவர் மயிலையில் கட்டின சிறு மாதாகோவிலில் அவரது சீடர்களால் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் நான்காம் நூற்றாண்டில், இவ்வுடலின் ஒரு பகுதி மத்திய ஆசியாவில் யூப்ரெடிஸ் நதிக் கரையில் உள்ள எடிஸ்ஸா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மத்திய கால சகாப்தத்தில், பிற மதத்தினர்களால் சேதமாகாமலிருப்பதற்காக அங்கிருந்து அகற்றப்பட்டு இத்தாலி நாட்டு ஏட்ரியாடிக் கடலோரம் உள்ள ஆர்டோனா என்னும் நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இயேசு நாதரின் சீடர்களில் "சம்சயாத்மா தாமஸ்" என்று குறிப்பிடப்பட்டவர் இவர்தான்.

உலோபி தனக்கிருக்கும் ஆஸ்திகளைக் கொண்டு பெரிய மாளிகை கட்டி வாழ விரும்பாமல் குடிசையிலே வாழ்வான். அதுபோலவே உண்மையும் ஏழைக் குடிசைகளில் வாழ்வதுண்டு.

—ஷேக்ஸ்பியர்.

நம்முடைய தத்துவ சாஸ்திரத்தில் நாம் கனவாலும் காண முடியாத பல விஷயங்கள் மண்ணிலும் விண்ணிலும் இருக்கின்றன.

—ஷேக்ஸ்பியர்.

இயேசு புனர் ஜனனம் அடைந்து காட்சி தந்தபோது அவருடைய புனித உடலில் ஆணிகள் அறையப்பட்டுப் புண்ணான இடங்களையெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்தாராம் சாது தாமஸ்.

அந்தப் புனித விரல்கள்—இயேசுநாதரைத் தொட்ட விரல்கள் அல்லவா? - இப்போதும் ரோமாபுரியின் ஸெயின்ட் ஜான் லாடிரென் தேவாலயத்தின் கர்ப்பக்ருஹத்தில் பாதுகாத்து வரப்படுகிறது. 1523ம் ஆண்டில், இத்தேவாலயம் பாழடைந்த போது புனர் நிர்மாணத்துக்காகப் போர்ச்சுகீஸியர் சவக்குழியைத் திறக்க நேரிட்டபோது, கண்டெடுத்தனராம். சவப் பெட்டியில் சில எலும்புத் துண்டுகளும், மர ஈட்டியின் முனையும், ரத்தம் தோய்ந்த மணல் நிரப்பிய மண் பாண்டமும் இருந்தனவாம்.

1683ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த எலும்புத் துண்டுகள்கூட எக்காரணத்தாலோ பின் தலைமுறைகளுக்குக் கிடைக்காமல் நஷ்டமாகிவிட்டன. யாராவது தனியார் வசம் ஏதாவது இருக்கிறதா, அல்லது சென்னைச் சுற்றுப் புறத்தில் உள்ள மாதா கோவில்களில் எங்கேயாவது வைக்கப்பட்டிருக்கிறதா என்பதும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. கிடைத்துள்ள எலும்புத் துண்டுகளும், ஈட்டியின் முனையும் சென்னை ஸாந்தோம் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இயேசுநாதரைத் தொட்ட விரல்களின் ஒரு பாகமும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதை 1953ம் ஆண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்த கத்தோலிக்க உயர் குரு டிஸ்ஸராண்ட் இத்தாலியிலிருந்து கொண்டு வந்து கொடுத்தார்.

இந்தியாவுக்கு நஷ்டமான ஒரு புராதனப் புனிதச் சின்னம் மேரி மாதாவின் ஒட்டியாணம். சிரியன் கிறிஸ்துவ ஐதிகப்படி, இந்த ஒட்டியாணத்தை மேரி மாதாவிடமிருந்து சாது தாமஸ் பெற்றாராம். மேரி அன்னை ஸ்வர்க்கம் சென்ற போது இதைத் தாமஸுக்கு அளித்துவிட்டுச் சென்றாராம். இதைக் கொண்டு சாது தாமஸ் சென்னையில் பல அற்புதங்களைப் புரிந்தாராம். ஒரு சமயம் மயிலாப்பூர் ராஜாவின் அரண்மனையின் கட்டுமான வேலைக்குப் பெரிய மரத் திம்மையைக் கொண்டு வர வேண்டியிருந்ததாம். ஸ்தலத்திலே பல யானைகளைக் கொணர்ந்து அதை நகர்த்த முயன்றபோதும் முடியவில்லையாம்.

சாது தாமஸ் தம்பிடமிருந்த ஒட்டியாணத்தை விசி, அதை வெகு சுலபமாக இழுத்துச் சென்று அரண்மனையில் சேர்த்தாராம்.

சாது தாமஸின் மரணத்துக்குப் பின் இந்த ஒட்டியாணம் பரங்கிமலை தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் 883ம் ஆண்டில் இங்கிலாந்தை ஆண்ட ஆல்பிரெட் மன்னன் தாம் சாது தாமஸுக்குச் செய்துகொண்ட விரதத்தைப் பூர்த்தி செய்யச் சென்னைக்கு உயர் அர்ச்சகர் ஸிக்லேம் (Siglem) என்பவரை அனுப்பி, அவர் திரும்பிச் சென்ற போது இந்த ஒட்டியாணத்தையும் எடுத்துச் சென்றாராம். இது இப்போதும் லண்டன் மாநகரில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் வைக்கப் பட்டிருக்கிறது என்று பாதிரியார் ஹாஸ்டன் (Father Hosten S.J.) கூறுகிறார்.

பரங்கிமலையில் உள்ள மேரி மாதா தேவாலயத்தில் இரண்டு புனிதமான கிறிஸ்தவச் சின்னங்கள் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒன்று தாமஸ் வைத்திருந்த ஓவியம். மற்றொன்று தாமஸின் இரத்தம் கசிந்த சிலுவை. ஓவியத்தில் குழந்தை இயேசுநாதரை மாதா (மேரி அன்னை) அணைத்துக் கொள்ளும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் மற்றொருவரான ல்யூக்காவே இவ்வோவியத்தைத் தீட்டினாராம். இதைச் சாது தாமஸ் தமது கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டே எங்கும் செல்வாராம். இதனால் இதற்குச் சாது தாமஸ் ஓவியம் என்ற பெயர் வந்து விட்டது. படம், ஒரு பலகையில் வரையப்பட்டுள்ளது. சிவப்பு, நீலம், மஞ்சள் வர்ணங்கள் சிறப்பாகத் தீட்டப்பட்டுள்ளன. இந்தப் படம் மிகவும் புராதனமானது. "ஆகவே இந்தியாவில் உள்ள எல்லா கிறிஸ்தவச் சின்னங்களைக் காட்டிலும் இது மிக மிகப் புனிதமானது" என்று பாதிரியார் ஹாஸ்டன் சொல்லுகிறார்.

சாது தாமஸ் இந்தியாவில் இருந்த ஆண்டுகளில் அவர் பிரசாரம் செய்த இடங்களிலெல்லாம் சிலுவைச் சின்னத்தைச் செதுக்கி வைத்தாராம். நமக்குத் தெரிந்தவரை அவர் செதுக்கிய ஏழு சிலுவைகள் இந்தியாவில் இருக்கின்றன. இவற்றில் ஐந்து மலபார் பகுதியில் உள்ளன. சென்னையில் இரண்டு இருக்கின்

மக்கள் எல்லாவற்றையும் மிக்க கவனத்துடன் நிதானித்துப் பார்த்தால், அலசிப் பார்த்தால், ஊன்றிக் கவனித்தால் தீமைகளிலும் நன்மைகள் இருக்கக் காணலாம்.

—ஷேக்ஸ்பியர்.

நன்மை என்றும் தீமையென்றும் தனித்தனிப் பொருள்கள் இல்லை. இவைகளை உண்டாக்குவது இந்தப் பாழும் மனமே.

—ஷேக்ஸ்பியர்.

றன. ஒன்று சாந்தோமுக்கு அருகில் உள்ள சின்ன மலையில் (Little Mount) உள்ளது. மற்றொன்றுதான் ஸெயின்ட் தாமஸ் மௌன்ட் என்ற பரங்கிமலையின் மேரி மாதா தேவாலயத்திலுள்ள புகழ் பெற்ற தாமஸ் சிலுவை. ஐதிகப்படி இந்தச் சிலுவையை அவர் தாமே செதுக்கிவைத்ததாகவும் அதன் முன்னாலேயேதான் அவர் கொல்லப்பட்டதாகவும், ஏசு நாதர் செய்தது போலவே அதை அணைத்துக் கொண்டே உயிர் துறந்ததாகவும் சொல்லப் படுகிறது. இந்தத் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டதும் 1551ம் ஆண்டில், தாமஸின் சிலுவை இதன் சுவரில் பதித்து வைக்கப் பட்டது. அப்போது இந்தச் சிலுவையிலிருந்து காண்போர் பிரமிக்கும்வண்ணம் சிறிதுரத்தம் கசிந்து கொண்டிருந்ததாம். அது முதல் ஆண்டுதோறும் டிசம்பர் 18ந் தேதியன்று இச்சிலுவையில் ரத்தத் துளிகள் கசிந்து கொண்டே இருந்ததாம். இப்படி 1704 வரையில் நடைபெற்றது. சிலுவையில் பொறிக்கப்பட்ட வாசகங்கள் வழக்கில் இல்லாத ஸஸ்ஸேனிய பஹ்லவி அல்லது புராதன பாரசீக மொழியில் உள்ளன. 'சிலுவையின் மூலம் தேவதூதன் உலக முழுவதற்கும் மோட்சம் அருளினன்' என்று பொருள்பட வாசகம் அமைந்துள்ளது. சில அறிஞர்கள் சாது தாமஸின் புனித மரணத்தைப் பற்றி இது சூசிப்பிக்கிறது என்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

பதினாறுவது நூற்றாண்டின் மத்திய காலத்தைச் சேர்ந்த பல உருவச்சிலைகள் — இவை மேரி மாதா, ஏசுநாதருடையவை—இந்தியாவின் பல பாகங்களில் காணப் படுகின்றன. இவற்றுள் மயிலாப்பூர் தேவாலயத்தில் உள்ள மேரி மாதா சிலைதான் மிகப் புனிதமானதும் அழகானதும். 1543ம் ஆண்டில் இந்தியாவுக்கு இது கொண்டுவரப்பட்டதாம்.

பிராடெஸ்டென்ட் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் சிலைகள், விக்கிரகங்கள், சின்னங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்காதவர்களாகையால் அவர்கள் சம்பந்தப் பட்ட சின்னங்கள் அதிகம் இல்லை எனினும் தென்னகத்தில் சென்னைக்கு இருநூறுமைல் தெற்கே தரங்கம்பாடியில் ஆதி கால கிறிஸ்தவச் சின்னங்கள் சில உள்ளன.

இந்தியா முழுவதும் சிதறிக் கிடக்கும் இத்தகைய கிறிஸ்தவச் சின்னங்கள் புராதனமானவை மட்டும் அல்ல; இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு இவை அனைத்தும் சான்று கூறுகின்றன.

—கல்கி.

நம்முடைய சக்திகளுக்கும் ஆவல்களுக்கும் மத்தியில் அதிக வித்தியாசமில்லாமல் கூடியவரையில் சமன்வயப்படுத்திக் கொண்டு செல்வதிலேதான் உண்மையான சந்தோஷம் இருக்கிறது.

—ரூஸோ.

அமெரிக்காவில்

கண்டதும் கேட்டதும்

பத்மஸ்ரீ. நெ. து. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.
(தமிழக அரசின் கல்வித் துறை இயக்குநர்.)

நான் அண்மையில் அமெரிக்கா சென்று வந்தேன். எதற்காக? அங்குள்ள கல்வி முறைகளையும் திட்டங்களையும் காணச் சென்றேன். அமெரிக்கக் கூட்டாட்சி சர்க்கார் அழைப்பின் பேரில் சென்று வந்தேன். அங்கு ஏழு வாரங்கள் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தேன். பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகங்கள் வரை பார்க்க வாய்ப்பு கிடைத்தது. பலநிலைக் கல்வியாளர்களோடு கலந்து பேசும் வாய்ப்பும் கிடைத்தது.

அமெரிக்க மக்கள் உடல் வலியும் உள்ள வலியும் உடையவர்கள். சுறுசுறுப்பானவர்களும்கூட. தாக்குப் பிடிக்கும் சக்தி மிகுந்தவர்கள். அவர்கள் அலுவலகங்கள் கூட—காலை 9 மணிக்குத் தொடங்குகின்றன. மாலை 5 மணி வரை வேலை செய்கிறார்கள். முழு நேரமும் வேலை செய்கிறார்கள். அந்த அலுவலகங்களில் உள்ளவர்கள் காலத்தை வீணாக்காமல் பணி புரிகிறார்கள். அலுவலக முறையும் விரைவாக முடிவு செய்யக் கூடிய வகையில், எளிதாக அமைந்திருக்கிறது. நம்பிக்கை என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது. எனவே, நம்மைவிட அதிக நேரம் உழைப்பதோடுமட்டுமல்லாமல், பல மடங்கு அதிக வேலை செய்ய முடிகிறது. சட்சட்டென்று எடுத்த வேலைகளை முடித்துத் திருப்தி கொள்ள முடிகிறது.

அமெரிக்க நகரத் தெருக்களில் சாரை சாரையாகக் கார்களைக் காணலாம். பல சமயங்களில் அவை ஓடுவதற்குப் பதில் நகர்ந்து செல்லும். காரணம் போக்குவரத்து நெரிசல். பஸ்களுக்காகக் காத்திருக்கும் நீண்ட கியூவும் பல ஊர்களில் காலையும் மாலையும் சாதாரணக் காட்சி.

தன்னிச்சைப்படி அலைந்து திரியும் ஆடு மாடுகளை அந் நாட்டுத் தெருக்களில் காணவில்லை. ஏன்? ஊர்களுக்குள் ஆடு மாடுகளின் நடமாட்டமே இல்லை. நாய்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடுகின்றனவா? இல்லை. நடுத்தெருவில் படுத்து வெயில் காயும் நாய்களையும் அந் நாட்டில் காண முடியாது.

மனிதர்கள் எப்படி? சுதந்தர நடுத் தெருக்களில் நின்று பேசிக் கொண்டிருப்பார்களா? நடுச் சாலையில் நிதானமாக நடந்து கொண்டிருப்பார்களா? எந்த இடத்தில் வேண்டுமானாலும் தெருக்களைக் குறுக்கே கடந்து

செல்வார்களா ? இக்காட்சிகளும் அங்கு கிடையா. கடப்பதென்றால், சாலையோரமே நடப்பர். தெருவைக் கடப்பதென்றால், அதற்கென்று குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே கடப்பர்.

தெருக்களின் தூய்மை எப்படி? அமெரிக்கர் குப்பை கூளங்களைத் தெருக்களில் போடுவதில்லை. ஆகவே, அழுக்குக் குறைந்த தெருக்களையே காணலாம். தெருக்களில் எச்சிலைக் காண முடியுமா ? சளியைப் பார்க்கலாமா ? இவ்விஷயத்தில் அமெரிக்கர்கள் பெரும் கருமிகள். நம்மைப்போன்ற வள்ளல்களாக இல்லை. அவர்கள் பொது இடங்களில் கண்டபடி எச்சில் துப்புவதில்லை. நினைத்த பக்கம் சளியைச் சிந்திப் போடுவதில்லை. சிந்தித் தேய்ப்பதும் இல்லை. ஆகவே பொது இடங்களெல்லாம் அழுக்குக் குறைந்து தூய்மை மிகுந்து இருக்கின்றன.

அமெரிக்கர்களுக்கு, கல்வியின் பால் அசையாத நம்பிக்கை இருக்கிறது. கல்வி என்பதை அவர்கள் குறுகிய அளவில் கொள்ளவில்லை. குறைந்தது பள்ளி இறுதி வரையிலாவது படித்து முடிக்காத வாலிபன், பெண், பொருளாதாரத் தற்கொலை செய்து கொள்வதாக அவர்கள் நினைக்கிறார்கள், பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்.

அமெரிக்காவில், கல்வியென்பது மத்திய சர்க்கார் விவகாரமல்ல. இராச்சிய சர்க்கார் விவகாரம். இராச்சிய சர்க்காரே எல்லா நிலைக் கல்விக்கும் பொறுப்பு. ஆயினும் கல்வியின் கால அளவில் ஒருமைப்பாட்டைக் காணலாம். பள்ளிப் படிப்பு என்பது எல்லா இராச்சியங்களிலும் பன்னிரண்டு ஆண்டுப் படிப்பு. பன்னிரண்டு ஆண்டுக் காலமும் கட்டாயம் படிக்க வேண்டுமோ ? கட்டாயக் கல்விக் காலம் வேறுபடுகிறது. பெரும்பாலான இராச்சியங்களில் முதல் பத்தாண்டுப் படிப்பே கட்டாயம்.

கல்வி எல்லோருக்கும் இலவசம். ஏழை, பணக்காரர் என்று பிரித்து, இலவசக் கல்வி கொடுப்பதில்லை. பன்னிரண்டாவது வகுப்பு முடிய இலவசக் கல்வி கொடுக்கிறார்கள். பாட நூல்கள் இலவசமாகக் கிடைக்கின்றனவா? ஆம். மிகப் பெரும்பாலான இராச்சியங்களில் எல்லோருக்குமே இலவசப் பாட நூல்களும் குறிப்பு நூல்களும் கொடுக்கிறார்கள். சில இராச்சியங்களில்மட்டும், இப்போதைய நிதி நிலைமை சரியாக இல்லாததால் ஏழைகளுக்கு மட்டும் இவ்வசதி இலவசமாகக் கிடைக்கிறது.

தொடக்கக் கல்வி எத்தனை ஆண்டு ? உயர்நிலைக் கல்வி எத்தனை ஆண்டு என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா ? நல்லது. இதில் எவ்வளவு வேறுபாடுகள். இராச்சியத்திற்கு இராச்சியம் வேறுபாடுகள். இராச்சியம் முழுவதும் கூட ஒரே மாதிரியான அமைப்பு இல்லை. ஒரே இராச்சியத்தில் கூட, மாவட்டத்திற்கு மாவட்டம்

அமைப்பிலே வேறுபாடு காண லாம்.

கல்லூரிக் கல்வி எத்தனை ஆண்டு? முதல் பட்டப் படிப்பு நான்காண்டுப் படிப்பு. ஆகவே பதினாறு ஆண்டு படித்தால்தான் பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பட்டம் பெற முடியும். சில பகுதிகளிலே இரண்டாண்டுக் கல்லூரிகள் வைத்திருக்கிறார்கள். அவற்றில் படித்துத் தேறினால் பட்டம் கிடைக்காது. ஆயினும் இப் படிப்பு வீண் போவதில்லை. நான் காண்டுப் பட்டப் படிப்பின் முதல் நிலையாக இக் கல்லூரிப் பாடமும் அமைந்திருக்கிறது.

ஒரே வகுப்பில் இரண்டாவது ஆண்டு படிக்கும் மாணவனை வைக் கோற் போரில் ஊசி தேடுவது போல் தேட வேண்டும். காரணம்? அவர்களது குறிக்கோள் தெளிவு. பள்ளிக்கூடம், கற்க வைத்துத் தேற வைக்கவே என்பது அவர் கள் நம்பிக்கை. நிறுத்தி வைக் கப் பள்ளிக்கூடம் ஏன் என்று கேட்கிறார்கள். அடிக்கடி சோ தனை நடத்துகிறார்கள். எனவே எந்த மாணவன் எதிலே பின்ன டைகிறான் என்று இரண்டொரு மாதங்களில் தெரிந்துவிடுகிறது. அப்புறம் மேற்பார்வைப் படிப்பு, தனிக் கவனம் ஆகிய பல உபாயங் களின் மூலம் அநேகமாக எல் லோரையும் தேர்வு பெறத் தகுதி உடையவர்களாக்கி விடுகிறார்கள். குபேர நாட்டு ஆசிரியர்கள் தேக்கி வைத்துக் காலத்தையும் பணத்தையும் வீணாக்கவில்லை. நாம் மட்டும் தேக்கிவைத்துக் காலத்தையும், பணத்தையும் வீணாக்கி மகிழலாமா என்ற சிந் தனை பிறந்தது.

ஆசிரியர்கள் தகுதி நிலை எப் படி? தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட பி. ஏ. அல்லது பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவராயிருக்க வேண் டும் என்பது இப்போதைய விதி; பலர் எம். ஏ. பட்டம் பெற்றிருக் கிறார்கள். அநேக இராச்சியங் களில் ஆசிரியத் தொழிலில் கிடைக்கும் சம்பளத்திற்கும், அதே தகுதியுடையவர்களுக்கும் பிறவேற்றுமை இல்லையாம். ஆயி னும் ஆசிரியத் தொழில் சங்கங்கள் கேட்கும் அளவு சம்பளவிகிதம் உயரவில்லையாம். சில இராச்சியங் களில் இன்றும் ஆசிரியர் சம்பளம் கட்டைதான். ஆயினும் ஆசிரியர் சம்பள விகிதத்தில் ஒரு சிறப் பைக் கண்டேன். அது என்ன? தகுதி உயர்வுக்கு ஏற்ப, சம்பள உயர்வும் கொடுக்கப்படுகிறது.

—அகில இந்திய ரேடியோ பேச் சின் பகுதிகள். டிசம்பர் 25, 1964.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.

மரபின் மாண்பு

[ராஜாஜி]

மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியில் நான் நம்பிக்கை உள்ளவன். பழைய சிறப்புகள் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறவன். புத்தியினால் மட்டும் அறியக் கூடாததை நாடுகின்றவன். காரிய காரணத் தொடர்பு இல்லாத சிலவற்றில் எனக்கு நம்பிக்கை உண்டு. எல்லாவற்றுக்குமே காரிய காரண விளக்கம் தர இயலாது. அப்படித்தர முடியாதவைகளில் சில மிக முக்கியமானவை. அவற்றை அலட்சியம் செய்ய முடியாது. என் சித்தப் போக்கு நாடறிந்த விஷயம். எனவே என் காரிய காரணப் பிணைப்பற்ற தன்மை வாசகர்களுக்கு மிதமிஞ்சிய சிரமத்தைத் தராது.

ஜீவாத்ம, பரமாத்ம நம்பிக்கை இல்லாதவன் முடிவற்ற காரிருளில் அலைந்து திரிந்துதானாக வேண்டும். உலகம் சூரியன் இல்லாத நிலைமையைதான் அவன் காண்பான்.

அஸுர்ய நாமதே லோகா
அந்தேன தமஸா விருதா
தான் ஸ்தே பிரேத்யாபி
கச்சந்தி
யே கே சா ஆத்மஹனோ ஜனா:
(ஈசோபநிஷத்)

"தமது மனதில் ஆத்மாவுக்கே இடமில்லாமல் அடித்து விடுகிறவர்கள். அம்மாதிரி மறுப்பதன் காரணமாக மரணமெய்தி, சூரியனில்லாத உலகில், கன இருட்டு சூழ்ந்த நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்பது இதன் பொருள்.

ஆத்ம விசாரம்

மனிதனுக்குச் சரீரம் மட்டுந் தான் உண்டு. அதற்கப்பால் இலங்குகின்ற ஆத்மா இல்லை என்றால், இன்பமும் அவற்றைத் தருகின்ற பொருட்களும்தான் மிஞ்சும். இவற்றிற்காக உழைப்பதற்கு நாம் உயிரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமா? பிறகு மற்றொரு கேள்வி எழுகிறது. மனித வர்க்கத்தின் நன்மைக்காக, அதாவது இனி வரப்போகின்ற தலைமுறைகளுக்காக நாம் ஏன் உழைக்கலாகாது? அவற்றிற்காக ஏன் எதையாவது ஒருவன் செய்தாகவேண்டும்? அத்தகைய பணியுடன் அவனைப் பிணைப்பது எது? ஆத்மா இல்லை, சரீரம் தான் உண்டு என்றால் மனித வர்க்கமோ அல்லது இனி வரப்போகின்ற தலைமுறைகளோ ஏன் வாழ வேண்டும். வாழ்க்கையின் போராட்டங்களில் ஈடுபட வேண்டும்? உண்மையைச் சொல்லுமிடத்து, ஆத்மா இல்லையென்றால் நம்மில் ஒவ்வொருவரும் தனியாகவும், எல்லோரும் மொத்தமாகவும்

பேணிப் போற்றுகின்ற பெரு நியதிகளெல்லாம் மறைந்துவிடும்.

பரிணும தத்துவம்

ஒரு கண நேரம் 'மூடநம்பிக்கை' யினின்று வெளிப் போந்து, பரிணுமத்தின் பரிபாஷையில் பேசுவோம். 'ஜீன்ஸ்' என்ற உயிரணுக்கள், எண்ணற்ற தடவை யதேச்சையாக நிகழ்கின்ற மாறுதல்களுக்கு உள்ளாகி, பல கோடி வருஷம் கண்டவளர்ச்சியின் விளைவாக உருப்பெற்றவன் மானிடன் என்பதை ஒப்புக்கொண்டு இதைப் பார்ப்போம். இந்த நீண்ட கால வளர்ச்சியில் சுபாவமான சேர்க்கையைத் தேர்ந்தெடுத்து இன்றைய நிலைமையை அவன் வந்து அடைந்துள்ளான்.

சத்தியம், அன்பு, உயிருக்கு மதிப்பு, வாக்குப்படி நடப்பது, ஒத்துழைப்பு, உணர்வு, தயை, நன்றிபோன்ற நியதிகள் ஏற்றம் கண்டு, மனிதனது சிந்தனையில் நிலையான இடம் பெற்றுவிட்டன. எல்லா இடுக்கண்களையும் சமாளித்து தப்பிப் பிழைத்து வளருவதற்கான மதிப்பு உண்டு என்பதுதான் இவ்வாறு நடந்து வந்திருப்பதற்குக் காரணம்.

புறக்கணித்தால்

இந்தநியதிகளைப் புறக்கணிப்பது எவ்வாறு இருக்கும்? சிங்கமும் புலியும் தமக்கே உரிய துணிவு மிகுதியையும் மூர்க்கத்தையும் கைவிடுவது போல இருக்கும்; பறவைகள் தமது சிறகுகளைத் தியாகம் செய்வது போல இருக்கும்; காளைமாடு தன் கொம்புகளைத் துறப்பதுபோல இருக்கும்; மனிதன் தனது மூளையையும் நேராக நிமிர்ந்து நடக்கின்ற தன்மையையும் கைவிட்டதுபோல இருக்கும்.

மரபுச் செல்வம்

'வழி வழியான நியதிகள்' (Traditional Values) உலகமெங்கும் மதிப்புப் பெற்றுள்ள சிறப்பு நிலைகள். சமுதாயத்துக்குச் சமுதாயம் அவற்றிடையே அளவில் சிறிது வேறுபாடுகள் இருக்கும். இந்த நியதிகள் வியாபகமாக இருந்து வந்த துறைகளில், சமயச் சார்பற்ற சக்திகளும் ஸ்தாபனங்களும் படர்கின்ற நிலவரத்தில் அவற்றில் சிலவற்றின் வழி வழித் தன்மையானது தெளிவாகத் தெரியாமலிருக்கலாம், அல்லது மறைந்து விட்டிருக்கும்.

சக்தியற்ற மிருகம்

மரபை யொட்டிய இந்த நியதிகளை, நாசகரமான அவநம்பிக்கை சூழ்ந்து கொண்டு, இவற்றைக் கைவிட வேண்டும் என்பதற்கான இயக்கம் வெற்றி பெறுமாஞல், எத்தனையோ அகஸ்மாத்தான நிகழ்ச்சிகளின் அருளிஞல் கிட்டிய உயர் நிலையை விட்டு, பரிணுமத்தின் தொடக்கத்தில் இருந்த தாழ்நிலைகளுக்கே மனிதன் மீண்டும் தாழ்ந்து விடுவான். அந்நிலையில் தேகதிடமில்லாத, பரிதாபத்துக்குரிய காட்டு விலங்கின் நிலையை அடைந்து உலகிலிருந்து

அவன் அனேகமாக மறைந்து படலாம்.

நான் இங்கு சொல்லியிருப்பதை சிலர் நெடுநாளைக்கு முன்னரே கூறியிருக்க வேண்டும். அவற்றை யெல்லாம் நான் படிக்கவில்லை. இதை ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் இன்னும் திறம்படக் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

வளர்ச்சித் தத்துவம்

நாம் ஏதோ கண் மூடித்தனமாக தவறுகளை இழைத்து வளர்ச்சி அடைந்து விட்டோம் என்ற தத்துவத்தை நான் ஒப்புக் கொள்ள வில்லை. நமது வளர்ச்சியில் ஒரு நியமம் இருப்பதாக நம்புகிறேன். அது எப்போர்ப்பட்டது என்பதை துருவித் தேடிக் கண்டறிய இயலாது. எனவே மரபை யொட்டி சிறப்பு எய்திய இந்த நியதிகள் தாம், மனிதனது வளர்ச்சிக்கு ஆண்டவன் உருவாக்கிய நியமங்களைச் சேர்ந்தவை என்று நம்புகிறேன். சிலர் இவற்றைக் கைவிட்டு துன்பமடைந்தாலுங்கூட, மனித வர்க்கம் இவற்றைக் கை விடாது என்பது என் நம்பிக்கை. பாரம்பரியச் சீர்மையுடன், வழி வழியாக வந்து ஏற்றம் கண்ட நியதிகள் தனிப் பெருமை படைத்தவை. சமயச் சார்பற்ற அரசாங்கச் சட்டங்கள் ஒருகாலும் அவற்றிற்குப் போதியவாறு ஈடு செய்பவை ஆக முடியாது.

அசட்டு நிம்மதி

தமது படிப்பு அறையில் அமர்ந்த வண்ணம், இக்கால வாழ்வையும் பகுத்தறிவையும் சுட்டிக்காட்டி மரபை யொட்டிய நியதிகளைக் கண்டனம் செய்வது சுலபம். அதன் மூலம் ஓரளவு மனத் திருப்தியை யடையலாம்; வெற்றியுணர்வும் கொள்ளலாம். ஆனால் இந்த நியதிகளை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கு நமது மக்கள் கட்டுப்பட்டு நடந்து கொண்டிருக்கும் வரையில் தான், நாம் பத்திரமாக வாழ முடியும். அறிவாளிகள் எனப்படுவோர் எத்தகைய கண்டனங்களை வீசியபோதிலும் இது தான் நிலவரம். வாழ்வு நமக்கு அளிக்கின்ற மகிழ்ச்சியைத் தருபவை நாகரிகமும் பண்பாடுந் தான். இவை நெருக்கமாகப் பின்னி இணைக்கப்பட்ட ஒரு தளுவம் போன்றவை. எல்லா வளைவுகளையும் ஊடுருவி நின்று முடிச்சுகளை யெல்லாம் பிணைத்து வைத்திருக்கும் நூல் ஒன்றே. ஒரு மூலையில் அது அறுந்து வெளிவந்து விட்டால் என்ன ஆகும் என்பது நாம் அறிந்ததே. வழி வழியாக வந்த நியதிகளை நமது மக்கள் திரளாகக் கைவிடுவார்களாயின், நாகரிகமும் பண்பும் கீழ் நிலைக்குத்தாழ்ந்து போய் பிறகு மறைந்து விடும்.

—தினமணி.

30 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தென் துருவத்தில் இந்தியா

ஹாம்பர்க், நவ. 19—இன்று தனித்தனிக் கண்டங்களாகப் பிரிந்து கிடக்கும் பூமி, 30 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒருங்கிணைந்த ஒரே நிலப் பகுதியாக இருந்தது. உலகின் பிற பகுதிகள் கடலுக்கடியில் கிடந்தன. கண்டங்களின் இடப்பெயர்ச்சி காரணமாக பூமி பல துண்டுகளாகச் சிதைந்து இன்றுள்ள ஐந்து கண்டங்களாக உருமாறின. ஒரு காலத்தில் தென் துருவத்தில் அமைந்திருந்த இந்தியா, வட திசையை நோக்கி இடம் பெயர்ந்து சென்று ஆசியாவின் இன்றுள்ள இடத்தில் நிலைகொண்டிருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பூகோளப் படத்தைக் கவனமாகப் பார்த்தால் சில கண்டங்களின் கடற்கரை எல்லைக் கோடுகள் ஒரே மாதிரியாக இருப்பதைக் காணலாம். முக்கியமாக ஆப்பிரிக்காவின் கடற்கரைக் கோட்டையும், தென் அமெரிக்காவின் கடற்கரை எல்லைக் கோட்டையும் பாருங்கள். இவை இரண்டும் ஒரு காலத்தில் ஒன்றாக இணைந்திருந்து பிறகு பிரிந்தவை போன்று தோன்றுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டுக்கு என்ன காரணம்?

30 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஜெர்மன் புவி இயல் நிபுணரான ஆல்பிரட் வெகனர் இதற்கு விஞ்ஞான ரீதியான காரணம் ஒன்றைக் கண்டு பிடித்துக் கூறினார். "30 கோடி வருடங்களுக்கு முன்பு உலகின் தரைப் பகுதிகள் முழுவதும் ஒன்றாக இணைந்து ஒரே நிலப் பகுதியாக இருந்தது. உலகின் மற்றப் பகுதிகள் கடலில் மூழ்கிக் கிடந்தன. இடம் விட்டு இடம் பெயரும் தன்மையின் காரணமாக, ஒரே நிலப்பகுதி பல துண்டுகளாகச் சிதைந்து இன்று உள்ள பல கண்டங்களாக உருமாறின. ஒவ்வொரு கண்டமும் மேன்மேலும் இடம் பெயர்ந்து சென்று இங்குள்ள இடங்களில் நிலைகொண்டன. கண்டங்களின் இத்தகைய இடப்பெயர்ச்சி இன்றும் நிகழ்கிறது" என்று வெகனர் கூறினார். அவரது இக்கருத்தை, "வெகனர் தத்துவம்" என்கிறார்கள். ஐரோப்பாவிலிருந்து ஆண்டுக்கு 30 செ. மீ. விகிதத்தில் தென் அமெரிக்கா இடம் பெயர்ந்து சென்றது என்றும், கிரீன்லாந்து இன்னும் அதிக வேகத்தில் அதாவது ஆண்டுக்கு 30 மீட்டர் விகிதத்தில் ஐரோப்பா கண்டத்திலிருந்து பிரிந்து சென்றதாகவும் வெகனர் கூறினார்.

அதிசயம்; ஆனால் உண்மை

வெகனரின் இந்தக் கண்டுபிடிப்பு அப்பொழுது பெரும்பாலோருக்கு அதிசயமாக இருந்தது. பலர் இதை நம்ப மறுத்தனர். எனினும், இது பற்றி இடைவிடாது ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வந்தன. "வெகனரின் தத்துவம்" பெரும்பாலும் சரியே யென்று மேற்கு ஜெர்மனியிலுள்ள கோட்டிங்கன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புவி இயல் நிபுணர் பேராசிரியர் எச். ஜி. உண்டர்லிச் இப்போது நிரூபித்திருக்கிறார். "வெகனர் தத்துவ"த்தில் சில திருத்தங்களை மட்டும் செய்ய வேண்டுமென அவர் கூறுகிறார். முக்கியமாக கண்டங்கள், வெகனர் நினைத்ததுபோல், அவ்வளவு வேகமாக இடம் பெயரவில்லை. வருடந்தோறும் சில மில்லி மீட்டர் தூரந்தான் அவை இடம் பெயர்கின்றன. இந்த இடப்பெயர்ச்சி பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. எந்தத் திசையில் என்றில்லாமல் கண்ட திசையில் கண்டங்கள் நகர்கின்றன. கண்டங்கள் இன்று ஆயிரக்கணக்கான மைல்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட்ட போதிலும், அவற்றின் அடிச்சுவடுகளை, ஆதியில் அவை இருந்த இடங்களில் இன்றும் காணமுடிகிறது. முக்கியமாக தெற்குக் கண்டங்களில் இந்திய நாட்டு நிலப்பரப்பின் அடிச்சுவடுகளை இன்றும் காணலாம்.

தென் துருவத்தில் இந்தியா!

எனவே, இந்தியத் துணைக்கண்டம் உள்பட, தென் கண்டங்கள் எல்லாம் ஆதியில் தென் துருவத்தில் அமைந்திருந்தன என்பதும், பின்னர் அவை இடம் பெயர்ந்து இப்போது உள்ள இடங்களுக்குச் செல்கின்றன என்பதும் உறுதியாகிறது. 2·5 லட்சம் வருடங்களுக்கு முன்னர், மத்திய தரைக் கடல் இந்து மகா சமுத்திரத்துடன் இணைந்திருந்தது. அரேபியத் தீபகற்பமும், செங்கடலும் ஆப்பிரிக்காவுக்குக் கிழக்குப் பகுதியில் இருந்தன. இவை வடதிசையில் நகர்ந்து சென்று மத்தியக் கிழக்கில் நிலை கொண்டு மத்தியதரைக் கடலையும் இந்து மகாசமுத்திரத்தையும் இரு கூறாகப் பிரித்துவிட்டன. தென் துருவத்தின் தென்கோடியில் அமைந்திருந்த இந்தியா வடக்கு நோக்கி நகர்ந்து ஆசியாவை அடைந்தது. அரேபியாவும் இந்தியாவும் ஆசியாவில் புதிதாக இடம் பெற்ற நாடுகள்.

எப்படி மாறுகிறது?

கண்டங்கள் இடம் பெயரக் காரணம் என்ன? பூமியின் தரை மட்டத்தில் சில இடங்களில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும்போது இடப்பெயர்ச்சி நிகழ்கிறது. மலைகளில் மடிப்புகள் ஏற்படுவதற்கு இத்தகைய ஏற்றத் தாழ்வே காரணம். பூமியின் உள் உறை வெப்பமும் இடப்பெயர்ச்சியைத் தூண்டுகிறது. தரைமட்டத்திற்கு அடி

யில் ஓடும் நீரோட்டம் தனது வேகத்துடன் வெப்பத்தையும் இழுத்துச் செல்கிறது. இதனால் கண்டங்கள் இடம் பெயர்கின்றன. அடிமட்ட நீரோட்டங்கள் இரண்டு ஒன்றாக இணையும் போது, "மடிப்பு மலைகள்" உண்டாகின்றன. நீரோட்டம் இரண்டாகப் பிரியும்போது கண்டங்கள் நகர்ந்து செல்கின்றன. கண்டங்களின் இடப் பெயர்ச்சி ஒரே வேகத்தில் நடைபெறுவதாகக் கொண்டால், இன்னும் 20 கோடி ஆண்டுகளில் இரு கண்டங்களுக்கிடையிலான இடைவெளி 4,000 கிலோமீட்டர் தூரத்திற்கு விரியும் எனக் கருதப்படுகிறது.

—" தினமணி "

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

அறுபது வருடங்களுக்கு மேல் தேச சேவையில் ஈடுபட்டிருந்த அவர் ஒருநாள்கூட சோர்வடைந்ததில்லை. இப்பழுத்த தேச பக்தர் காலமாகும் போது, அவருக்கு வயது 93.

"சுயராஜ்யம்" என்ற தாரக மந்திரத்தைக் கண்டுபிடித்த தந்தையவர். அவர் அன்றுபோட்ட விதை இன்று மாபெரும் ஆலமரமாகி தேசத்திற்குப் பலன் அளித்து வருகிறது.

—"கிராமநலம்"

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஆசிரியர் நலனுக்கு

இந்திய சுதந்திர மடைவதற்கு முன்பு ஆசிரியர்களின் நிலை, குறிப்பாக, ஆரம்ப, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. ஓய்வு பெற்ற பின் அவர்களுக்குக் கைகொடுத்து உதவ பென்ஷனோ அல்லது வேறு உதவித் தொகையோ கிடையாது.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும், ஆசிரியர்களை உன்னத நிலைக்கு உயர்த்துவதன் அவசியத்தை உணர்ந்து, ஆசிரியர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் அவர்களின் சம்பளம், வேலை நிலைமை ஆகியவற்றைச் சீர்செய்வதற்கும் மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தின.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மத்திய அரசாங்கம் பல திட்டங்களை அமல் செய்தது. ஆரம்ப நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தைக் கூட்டுவதற்காக, ராஜ்யங்கள், அவர்களுக்கு அளிக்கும் தொகைக்குச் சமமான தொகைகளை வழங்குவதற்கான திட்டம் ஒன்றை அமல் செய்ததோடு, ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகளும், அவர்களின் குழந்தைகளுக்கென திறமை அடிப்படையில் உபகாரச் சம்பளங்களும் வழங்கியது.

ஆசிரியர்களின் வாழ்க்கையில் வளம் காண்பதற்கான திட்டங்களில் மிக முக்கியமான திட்டம், ஆசிரியர் நலனுக்கான தேசிய நிறுவனம் ஆகும். இது 1963, ஜூன் 25-ஆம் தேதி துவக்கி வைக்கப்பட்டது. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த தினமான செப்டம்பர் 5-ஆம் தேதியை ஆண்டு தோறும் ஆசிரியர் தினமாய்க் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தினத்தன்று மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள் ஆகியவற்றுடன் ஆசிரியர் நலனில் அக்கறை கொண்ட தனி மனிதர்களும் தம்மாலான நிதி உதவியை இந்த நிறுவனத்துக்கு அளிக்கலாம்.

ஆசிரியர்கள் சமுதாயத்தின் மிக முக்கியமான அங்கம் என்ற வகையில் அவர்களுக்கு உதவி அளிக்கும் இத்திட்டம் ஒரு நல்ல திட்டமாகும் என்று காலஞ்சென்ற பிரதம மந்திரி திரு. ஜவாஹர்லால் நேரு பாராட்டியுள்ளார்.

ஐந்து கோடி ரூபாய் குறியளவு

தேசிய நிறுவனத்தின் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள மத்திய கல்வி மந்திரியின் தலைமையில் அமைந்துள்ள பொதுக் கமிட்டி ஐந்து கோடி ரூபாய் குறியளவை நிச்சயித்திருந்தது. மத்

தேசிய நிறுவனம்

திய அரசு ஐந்து லட்ச ரூபாயும் மாநில அரசுகள் தலா 25 ஆயிரம் ரூபாயும் அளித்திருக்கின்றன. இதுவரை மொத்தம் 54 லட்சம் ரூபாய் இதில் சேர்ந்துள்ளது.

இந்த ஆண்டு செப்டம்பர் 5—ஆம் தேதியிலிருந்து, இதன் மூலமான உதவித் திட்டத்தை ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வறுமை நிலையிலுள்ள ஆசிரியர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும், இந்த நிதியின் பெரும் பகுதி செலவிடப்படும். சிறந்த சேவை செய்த ஆசிரியர்களுக்கு மொத்தமாகத் தொகைகள் அளிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

செயல் கமிட்டி

ஒவ்வொரு ராஜ்யத்திலும் மத்திய அரசின் நேர் நிர்வாகப் பகுதியிலும், அந்தந்த அரசின் கல்வி மந்திரி அல்லது லெப்டினன்ட் கவர்னர் அல்லது பிரதம கமிஷனர் ஆகியோரின் தலைமையில் செயல் கமிட்டிகள் இயங்கி வரும். அந்தந்த மாநில அரசின் கல்வி இலாக்கா டைரக்டர் காரியதரிசி பொருளாளர் அலுவல்களை உத்தியோக முறையில் கவனித்து வருவார்.

ஆசிரியர்கள் அல்லது அவரது குடும்பத்தினர் உதவி கோரிச் செய்துகொள்ளும் மனுக்களை தத்தம் ராஜ்ய கல்வி இலாக்கா டைரக்டர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மனுதாரர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) ஆசிரியரின் குடும்பத்தினர், ஆசிரியர் இறந்த ஒரு வருஷத்துக்குள் மனுச் செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) ஆசிரியர் உயிரோடிருந்தால், அவர் நிரந்தரமாய் சேவைக்குத் தகுதியற்றபடி ஊழியமுள்ளவராய் இருக்க வேண்டும்.

(இ) ஆசிரியர் குடும்பத்தின் மொத்த வருவாய் வருஷத்துக்கு ரூ. 1,500—க்கு மேல் போகக் கூடாது.

(ஈ) ஆசிரியர் குடும்பத்தில், குடும்பத்தைப் பராமரிக்கக்கூடிய வயதுடையவர் எவரும் இல்லாமலிருக்க வேண்டும்.

(உ) ஆசிரியர் ஓய்வு பெற்றவராயும், தாம் பணி புரிந்த கல்வி நிறுவனத்துக்கும், பொதுமக்களுக்கும், 30 ஆண்டு காலம் சிறந்த சேவை செய்தவர் என்று ராஜ்ய கல்வி இலாக்காவினரால் கருதப்படுபவராயும் இருக்க வேண்டும்.

—"தினமணி"

செயற்கை வைரங்கள்

[எஸ். கந்தசாமி]

இயற்கையன்னை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தன்னகத்தே வைத்து விளைவிக்கும் பெருமைக்குரிய வைரத்தை இன்றைய தொழிற்கூடங்கள் ஒரு சில மணி நேரங்களுக்குள்ளாகவே தயாரித்து வருகின்றன.

நவரத்தினங்களிலெல்லாம் உயர்ந்ததும், மிகவும் உறுதியானதுமான வைரம், மன்னர்களின் மணிமுடிக்கும், பிரபுக்கள் வீட்டுப் பெண்மணிகளின் ஆபரணங்களுக்குமே பயன்பட்ட நிலை மாறி இன்று பெரிய பெரிய தொழிற்கூடங்களுக்கும், சின்னஞ் சிறிய கைக்கடிகாரங்களுக்கும்கூட அத்தியாவசியமானவையாகிவிட்டது. எனவே, முன்பு காரட் கணக்கில் மட்டுமே நின்ற இதன் தேவையானது இந்நாளில் டன் கணக்கில் உயர்ந்துவிட்டது. தேவை கண்டு பிடிப்பின் தாய் அல்லவா? ஆகவே, பட்டு, ரப்பர், முத்து ஆகியவற்றுக்குச் செயற்கைப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டதுபோலவே தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடிய செயற்கை வைரங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இத்தகைய செயற்கை வைரங்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இன்று உலகிலேயே ஒன்பதுதான் உள்ளன. அவற்றுள் ஒன்று நம் தமிழ் நாட்டில் நீலகிரி அடிவாரத்திலுள்ள மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 12 டன் உற்பத்தித் திறன் கொண்ட இத்தொழிற்சாலையினால் நமது நாட்டுக்கு வருடத்துக்கு சுமார் 24 லட்சம் ரூபாய் வெளி நாட்டுச் செலாவணி மீதமாகிறது.

இனி, செயற்கை வைரங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்று பார்ப்போம். அம்மோனியம் சல்பேட், அலுமினியம் சல்பேட் ஆகிய இரண்டையும் மிக சுத்தமான நீருள்ள ஒரு தொட்டியில் கரைத்துவிட வேண்டும். இதனால் கிடைக்கும் படிகங்களை இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட உலைகளில் இட்டுப் புடம் செய்யப்படும். அப்போது இப் படிகங்கள் பனிக்கட்டிபோன்ற வெண்ணீராக உருவடைகின்றன. இவை சல்லடையால் நன்கு சலிக்கப்பட்ட பின்பு உலையிலுள்ள சன்னமானதொரு வாய் வழியாக ஆக்ஸி-ஹைட்ரஜன் ஜுவாலையின் உதவியால் கொஞ்சங் கொஞ்சமாக மேலிருந்து கீழே இறக்கப்படும். இங்குதான் மூலப் பொருட்கள் கெட்டியாக்கப்பட்டு உருவ வேறுபாட்டினையும் செயற்கை வைரம் என்கிற பெய

ரையும் அடைகின்றன. சுமார் $2\frac{1}{2}$ அங்குல நீளமும், $\frac{3}{4}$ அங்குல அகலமும் கொண்டு காண்பதற்குக் கண்ணாடிச் சில்லுகளைப் போலத் தோற்றமளிக்கும். இவற்றை உற்பத்தி செய்ய சுமார் 2000 (சென்டிகிரேட்) டிகிரி வெப்பமும், ஏராளமான அழுக்கமும் இருந்தாலன்றி முடியாது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் செயற்கை வைரங்கள் நகைகளுக்கு மட்டுமின்றி கைக்கடிகாரங்களிலுள்ள சிறு சிறு வளையங்கள், ஜுவல்ஸ், கிராமபோனுக்கான நீண்ட நாள் உழைக்கும் ஊசிகள், உமிழ் வாய்கள் ('நாஸில்'), அதிவெப்ப உலைகளில் பதிக்கப்படும் கண்ணாடிபோன்ற பலகணிகள், மின்சார மீட்டர்கள்—இப்படி எத்தனையோ காரியங்களுக்குப் பயன்படுகின்றன.

பூமியில் விளைந்த இயற்கை வைரத்துக்கும் தொழிற்சாலையில் பிறந்த செயற்கை வைரத்துக்கும் இடையே வேறுபாடு காணுவது மிக அனுபவம் வாய்ந்த வைர பரிசோதகர்களால் மட்டுமே முடியும். ஏனெனில், இவை அமைப்பு, ஒளிவீச்சு ஆகிய இரண்டிலும் ஒன்று போலவே தோன்றக் கூடியவை. ஆனால், இயற்கை வைரங்களைக் காட்டிலும் செயற்கை வைரங்கள் சற்றே உறுதிக் குறைவானவை. இதற்குக் காரணம், இயற்கை வைரங்கள் நிலத்துள் மிக ஆழமான பகுதியில் ஏராளமான அழுக்கத்தில் சுமார் 30, 40 லட்சம் ஆண்டுகள் விளைகின்றன. ஆனால், செயற்கை வைரங்களோ 3 அல்லது 4 மணி நேரத்துக்குள்ளாகவே தயார் செய்யப்படுகின்றன.

வைரங்களை உற்பத்தி செய்து விட்டால் மட்டும் போதுமா? பட்டை தீட்டினால்தானே அவை ஒளிவிடும்? செயற்கை வைரங்கள் உற்பத்தியாவது மட்டும்தான் தொழிற்சாலையில். பட்டை தீட்டப் பெறுவதெல்லாம் பெரும்பாலும் குடிசைகளிலேயே! தொழிற்சாலைகளில் கிடைக்கும் வைரச் சில்லுகளை வாங்கிச் செல்லும் தொழிலாளர்கள் அவற்றைச் சுமார் அரை அடி நீளமுள்ள சிம்புகளின் நுனியில் பொருத்திக் கொள்கிறார்கள். பின், அவற்றை அவரவர் திறமைக்கும், தேவைக்கும் ஏற்ற மாதிரிகளில் கையினால் இயக்கப்படும் சாணைக்கற்களில் பட்டை தீட்டுகிறார்கள். பின்னர்தான் அவை ஆபரணங்களில் பதிக்கப்படுகின்றன. இந்நாளில் இச்சாணைக்கற்களை இயக்க மின்சார மோட்டார்களும் பயன்படுத்தப்படுகின்றன.

வைரத்துக்குப் பட்டை தீட்டும் தொழிலில் நமது நாட்டவர் மிகவும் திறமைசாலிகளாவர். வட இந்தியாவில் ஜெய்ப்பூரிலும், தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி, கரூர், ஈரோடு இவற்றின் சுற்றுப்புறங்களிலும், கேரளத்தில் திருச்சூரிலுமாக சுமார் இரண்டு லட்சம் பேர்களுக்கு இப்பட்டை தீட்டும் தொழில் இன்று வாழ்வளித்து வருகிறது.

—"சுதேசமித்திரன்"

கறி வேம்பு

[வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர்]

பராசக்தி என்ற வேம்பு கட்டுரையைக் கடந்த ஆண்டு சுடரில் வாசித்த அன்பர்கள் இந்தக் கறி வேம்பு பற்றிய விபரம் கேட்டு எழுதியுள்ளனர். வேம்பு, மலை வேம்பு, சர்க்கரை வேம்பு ஆகியவைகளுக்கு விளக்கம் தந்தது போல இதற்கும் அறிய ஆவல் போலும். கறிவேம்பு என்பது என்னவோ அதுவும் கசப்பு ருசியாகத்தான் இருக்குமோ என்று நினைத்துவிடாதீர்கள். நாம் சமயலில் சாதாரணமாக நாள் தோறும் சேர்க்கும் கறிவேப்பிலைக் கொத்து இருக்கிறதே அதைத்தான் கறிவேம்பு என்று அகராதிகள் குறிப்பிடுகின்றன. உணவுடன் உண்ணும், பலவித காய்கறிகளுடன் சேர்ப்பது வழக்கம். எனவே, இதற்குக் கறிவேம்பு கறிவேப்பிலை என்று முன்னோர்கள் பெயர் வைத்துவிட்டனர்.

இந்தக் கறிவேம்பு பெரியோர்களை விட சிறுவர்களுக்கே மிக அதிகமாகத் தெரியும். ஏனெனில் காய் கடைக்குப் போவோரின் கண்கள் புதியதாக என்ன காய் வந்துள்ளது, இதில் எது உடம்புக்கு நல்லது, அதைப் பேரம் பேசி நல்லதாகத் தேர்ந்தெடுத்து வருவதற்கே நேரம் இருக்காது. வீட்டில் உள்ள தாய்மார்களும் அநேகம் பேர் கவனிக்காமல், வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு போடும் போதுதான் கறிவேப்பிலை நினைவுக்கு வரும். காய் கூடையை அவசர அவசரமாகப் பார்த்த பின்பு இந்த அற்ப கறிவேப்பிலைக்குப் பெரியோரை அனுப்புவதா என்று நினைத்துக் கொண்டே பள்ளி செல்லும் சிறுவனைக் கூப்பிட்டு "டேய் கண்ணு! நயினு... அடுப்பிலே கடுகு பொறியுது, சட்னுபோயி கறிவேப்பிலை வாங்கி வாப்பா" என்று சொல்லும்போது, எனக்கு இரண்டு பைசா கொடுத்தா போவேன் என்று சொல்லி தனது கமிஷனும் சேர்த்து வாங்கிக் கொண்டு ஒரு நொடியில் போய் வருவான். இப்படி கமிஷன் வாங்கித்தந்த கறிவேப்பிலையை எப்படி மறப்பான்.

கறிவேப்பிலை சிறு மர வகுப்பைச் சேர்ந்தது. பொதுவாக இது காட்டில் வளர்ந்தாலும், நாடு நகரங்களில் உள்ள வீடுகளில் நாள் தோறும் நுழையாவிடில், வீடு மணக்காது! வீட்டிலுள்ளவர்கள் மனம் மணக்காது. அடுக்களைச் சாமான்கள் கூட மணக்காது. நாட்டில் சிலர் இதனை பிரியமுடன் வளர்க்கவும் செய்கின்றனர். ஆனாலும் வியாபாரம் செய்யும் அளவு யாருக்கும் துணிவிருக்காது. குத்துச் செடி வளரும் காடுகளில், பயிராகும் இந்தக் கறிவேப்பிலை வியாபாரம் ஒரு

குறிப்பிட்ட வகுப்பாரிடையே மட்டும் உள்ளது. பரம்பரை, பரம்பரையாகவே இந்த இனத்தவர்கள்தாம் வியாபாரம் செய்து வருகின்றனர். எந்த அரசாங்கமும் இவர்களிடம் வியாபார வரியோ விற்பனை அல்லது வருமான வரியோ வாங்கவும் முடியாது. அப்படி ஒரு சட்டம் வந்தாலும், அரிசி வியாபாரி, தங்கம் வியாபாரிகளைப் போல் அச்சம் கொள்ளவும் மாட்டார்கள். மலைக் குறவர்கள் இனத்தைச் சேர்ந்த இவர்கள் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அன்றாட உணவைப் பற்றிக் கவலை கொள்வார்களே தவிர மேற்கொண்டு நாளைக்கு வேண்டும் என்ற சேமிப்பு எண்ணம் கிடையாது. நாகரிகம் என்பது பற்றி கவலைப்படமாட்டார்கள். இவர்கள் பிரயாணம் செய்யும் ரயில், கறிவேப்பிலை பறிக்கும் காடு, விற்பனை செய்யும் சந்தை எல்லா இடங்களையும் தம் சொந்த இடமாகவே பாவித்து விடுவது இவர்கள் வழக்கம். இப்படி வாழ்கின்றவர்களிடம் எந்த வரியைப் போட்டு எப்படி வசூல் செய்வது என்று 'திரு திரு' என்று விழிக்க வேண்டியதுதான்.

முதுகில் கன்னங்கரே லென்ற ஓர் இளங்குழந்தை; மடியிலோ அல்லது தோளிலோ கறிவேப்பிலைக் கொத்துக்கள் சுமந்துவரும் இவர்கள் குரல் கொடுத்து கறிவேப்பிலை விற்கும் பாணியே ஒரு தனிரகம்! 'விற்பனை ராகம்' அடுக்களையில் உள்ள தாய்மார்களின் கவனத்தை ஈர்க்கும் சக்தி கொண்டதாக அமையும். ஒரு வீட்டில் சிறிது கறுப்பு நிறமாக ஒரு குழந்தை பிறந்துவிட்டால் போதும். இது கறிவேப்பிலை விற்கிறவளே அவளிடம் வாங்கியதா என்று நையாண்டி செய்வார்கள். இந்த வகையிலாவது அரிய பொருளாகிய கறிவேப்பிலை கொண்டு வருபவர்களைச் சிறப்புச்செய்வதும் நம் நாட்டின் பண்புதான்.

குணமும், பயனும்

கறிவேப்பிலைக்குச் சிறப்பாக மணமூட்டும் குணம் அதிகம். அறுசுவை உண்டிக்கு அத்தியாவசியமானபொருள். உடலுக்குப் பலத்தை உண்டு பண்ணும். பசியைத் தூண்டும். பித்தத்தைத் தணித்து உடல் சூட்டையும் குறைக்கும். மனத்தில் மகிழ்வின்பத்தைக் கொடுக்கக் கூடிய காட்டுமூலிகை கறிவேம்பு. குமட்டல், வாந்தி, அசீரண பேதி ஆகியவைகளைப் போக்கும். மேலும் இந்தக் கறிவேப்பிலையால் பித்த மிகுதியால் வந்த பைத்திய ரோகங்களும் விலகுவதாகச் சித்தர் வாகட நூல்களில் காணப்படுகிறது.

மேற்கண்ட குணங்களையுடையதால்தான் நாள்தோறும் தவறாமல் வீடுகளில் செய்யும் எல்லாப் பண்டங்களிலும் தாளிதம் செய்யக் கறிவேப்பிலையைப் பயன் படுத்துகிறார்கள். இதைப் பயன்படுத்துகிறார்களே தவிர, பண்டைய விதிமுறைகள் எல்லாம் மாறிப் போயின. இதை உணவில் ஏன் பயன்படுத்த வேண்டும்? பலர் இதைச் சிந்திப்பதே இல்லை.

தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டுமென்று எவன் ஆவல் கொள்கிறானோ, எவன் தான் கொண்ட ஆவலின்படி காரியங்களைச் செய்கிறானோ அவன்தான் உண்மையான சுதந்திர புருஷன். மாற்றத்தைக் கண்டதும் மாறும் தன்மையுடைய அன்பு உண்மையான அன்பாகாது.

—ரூஸோ.

ஒருவனது வாய்ப் பேச்சைக் காட்டிலும் அவனது மௌனம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

—ஷேக்ஸ்பியர்.

ஏதோ தாளிதம் செய்தார்கள் என்று உணவு உண்ணும் போது முதலில் இந்தக்கறிவேப்பிலைகளைப் பொறுக்கி இலை ஓரத்தில் ஒதுக்கி விட்டுத்தான் சாப்பிட ஆரம்பிப்பார்கள். "எட்டாள் வேலையை ஒரு சித்தாள் செய்வான்" என்பது பழமொழி. ஒரு நாடகத்திலே அரசன் தர்பார் சீன் வரும்; அதில் அரசன் கம்பீரமாக வீற்று இருந்த போதிலும் சுற்றிலும் நான்குபேர் நின்று வெண்சாமரம் வீசுவார்கள். இவர்கள் குட்டி நடிகர்கள்தான். இவர்கள் இல்லாமல் பிரதம கதாபாத்திரமாக நடிக்கும் பிரபல நடிகனுக்கு எவ்வளவு திறமைதான் இருந்தபோதிலும், அரசசபை சோபிக்குமா? இது போன்ற பெருமைதான் கறிவேப்பிலைக்கும். உடலுக்குப் பலத்தையும், சக்தியையும் தரும் பல கலப்புணவுகளைச் சமைத்து உண்ட போதிலும் அவைகளின் தீக் குணங்கள் நெஞ்சில் வந்து வாய்வழியாக எக்களிக்கும் குமட்டல், வாந்தி போன்ற செய்கைகளை உண்டாக்காமல், மணமூட்டி செரிப்பித்து அந்த உணவுகளுடன் உறவாடி கீழே இறங்கவைக்கும் சத்தி கொண்ட இந்தக் கறிவேப்பிலையை (தர்பார் சீன் முடிந்ததும் விரட்டியடிக்கும் விசிறி நடிகர்கள் போல்) ஒதுக்கிவிடுவது எவ்வளவு மதியீனம்.

இஞ்சி, கறிவேப்பிலை, கொத்துமல்லி ஆகியவைகள் சமயலறையின் இணைபிரியாத நண்பர்கள் என்று "சுப்பிரமணி" என்ற இஞ்சி கட்டுரையில் குறிப்பிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இவைகள் ஒன்றோடொன்று சேரும் போது சீரண உறுப்புகளின் துணைவனாக நின்று அங்கு உண்டாகும் ஆகாரக் குற்றங்களை நீக்குவதில் தன்னிகரற்று விளங்குகின்றன.

கறிவேப்பிலை துவையல்

பசுமையான புதிய கறிவேப்பிலையை ஒருபிடி எடுத்து நெய்யில் வதக்கிக் கொண்டு, அதற்குத் தகுந்தபடி பழம் புளியைச் சுட்டும் உப்பை வறுத்துக்கொண்டும், நாலு உலர்ந்த மிளகாயை நெய்யில் வறுத்து அனைத்தையும் அம்மியில் அறைத்து முதல் உணவுடன் நெய்கலந்து சாப்பிட்டபின் கறிவேப்பிலை தாளிதம் செய்த மோர் சோறு சாப்பிட்டுவர, ஓயாதகுமட்டல், வாந்தி, அஜீரணபேதி, உஷ்ணமாகி சப்தத்துடன் வெளியாகும் பேதி, சீத பேதி

பித்தத்தால் வந்த க்ஷயரோகம், செரியா மந்தம், வயிற்றுக் கோளாறு ஆகியவை நீங்கிப் போகும்.

வாய்வுப் பொருமலுக்கு கறிவேம்பு சூரணம்

கறிவேப்பிலை, சுக்கு, மிளகு, சீரகம், இந்துப்பு, பெருங்காயம், சோற்றுப்பு ஆக வகைக்கு ஒரு பலம் எடுத்து உலர்த்திப் பெருங் காயத்தை மட்டும் பொரித்து யாவும் தனித்தனியாக இடித்துத் தூள் செய்து கலந்து ஒரு புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். இந்தத் தூளை பேதியானாலும் சரி, அல்லது நான்கு நாட்களாக மலம் போகவில்லையானாலும் சரி, சோற்றை வடித்தவுடன் சூடு ஆறிப் போகு முன்பு அதில் உருக்கிய நெய் ஒரு மேசைக்கரண்டி விட்டுத் தூளை அளவுடன் போட்டுப் பிசைந்து உண்ணவும். மலச் சிக்கல் பேதி இவைகளை இரண்டையுமே நிறுத்தும் சக்தி இதற்கு உண்டு. மேலும் நாள் பட்ட மந்த பேதி, கிராணி பேதி, குடல் பல வீனப்பட்ட பேதி ஆகியவை களும் நின்று போகும்.

கறிவேப்பிலை ஈர்க்கு கஷாயம்

குழந்தைகளுக்கு அசிரண வயிற்றுவலி, பால் வாந்தி, செரியா மந்தம், பேதி ஆகியவைகளுக்கு இதன் ஈர்க்குமேல் தோல் நீக்கி தாய்ப்பால்விட்டு இடித்து சாறு பிழிந்து அதில் லவுங்கம் ஒன்றும், இரண்டுதிப்பிலியும் தூள்செய்து கலந்து, அரைசங்கு (பாலாடை) வீதம் தினம் இரண்டு முதல் மூன்று வேளை கொடுக்க யாவும் விலகும்.

கபவாத சுரங்களுக்குக் கஷாயம்

கறிவேப்பிர்க்கு, வேப்பிர்க்கு, முருங்கையிர்க்கு, நுரையிர்க்கு, நெல்லியிர்க்கு இவை சம அளவு ஒரு பிடி தட்டிப் போட்டு அதில் சுக்கு, மிளகு, சீரகம் மூன்றும் அரைப்பலம் தட்டிப் போட்டு கஷாயமிறக்கி (இரண்டு குவளை நீர் விட்டு) வேளை ஒன்றுக்கு ஒரு முடக்கு வீதம் கஷாயத்தைக் குடித்துவர கபரோகம் (நுரையீரல் சம்பந்தப்பட்ட) சளி, இருமல், சுரம், வாத சுரம் ஆகியவைகளை நீக்கும்.

பைத்திய தோடம் நீங்க

பசுமையான கறிவேப்பிலையை எடுத்து அதனுடன் சிறிது சீர

நகரங்களிலே வசிப்பதை நான் ஆதரிக்க முடியாது. மற்றவர்களுக்கு எவனொருவன் உதாரண புருஷனாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறானோ அவன் கிராம வாழ்வையே நாடவேண்டும். நமது உள்ளம் கறைபடாதிருக்க வேண்டுமானால் அதற்குக் கிராம வாசம்தான் சிறந்தது.

—ரூஸோ

கலைகளும் விஞ்ஞானமும் விருத்தி யடைந்திருப்பதால், மனிதனுடைய ஒழுக்கம் உயர்வடைந்திருக்கிறதா?

—ரூஸோ

கம், மஞ்சள் சேர்த்து அறைத்து ஒரு புன்னைக்காய் அளவு உருண்டை காலையில் வெறும் வயிற்றில், பித்தத்தால் வந்த பிதற்றல், வைத்திய தோடங்களுக்கு அரைமண்டலம் தவறாது சாப்பிட்டுவர படிப்படியாக நோய் குறைந்து போகும்.

கறிவேப்பிலையின் அருங்குணம் நாள் தோறும் பயன்படுத்தும் அனைவருக்கும் தெரியவேண்டியது அவசியம். வெறும் மணமூட்டும் வஸ்துவாக நினைத்து, சாப்பிடும் போது அதை நீக்கி சாப்பிடும் அநாகரிகப் பழக்கம் ஒழிந்து கறிவேப்பிலையை உணவுடன் உள்ளுக்குத்தள்ளவேண்டும். அதுபோல துணையாசிரியர்கள், துணை நடிகர்கள், துணைத் தலைவர்கள், அலுவலக—உப சிப்பந்திகள் இவர்களால்தான் சமுதாயம் மணம் கமழுகின்றது. இவர்களை அந்த நிமிஷங்களில் மட்டும் அற்பமாக எண்ணுமல் எந்த நேரத்திலும் நன்மதிப்புத் தரவேண்டும்.

கறிவேப்பிலை காணுத மங்கை

காடு மலை எங்கும் ஏராளமாகக் காணும் இந்தக் கறிவேப்பிலை திருப்பதி மலையில் ஒரு செடியைக் கூட காணமுடியாது. காரணம் என்னவோ? ஆனுலும், இம்மலையில் எழுந்தருளியுள்ள வேங்கடேச பெருமானுக்கு அலர்மேல் மங்கைத் தாயார் எல்லா ஸ்ரீதனங்களுடன் வந்தபோது கலியுக வரதன் எல்லா சீருடன் வந்தனையா? என்று வினவ, ஆம் சுவாமி என்று மங்கைத்தாயார் தெரிவிக்கவும், கறிவேப்பிலை கொண்டு வந்தனையா? என்று கேட்க அலர்மேலு மங்கை திகைத்துப்போய் ஏழுமலைகளிலும் கறிவேப்பிலையைத் தேடித் தேடி அலைந்துகாணுமல் போகவே அதே வருத்தத்துடன் திருப்பதிக்குத் தென்புரம் வந்து தங்கிவிட்டதாக வரலாறு தெரிந்தவர்கள் சொல்லுகிறுர்கள். அதனுல் தானே என்னவோ வீட்டில் கறிவேப்பிலை இல்லை என்று கணவரிடம் கூறுமல் நம் நாட்டுப் பெண்மணிகள் தனது பையன்களிடம் கமிஷன் கொடுத்து கறிவேப்பிலை வாங்கி வரச் சொல்கிறுர்கள்.

கறிவேப்பிலையோ வேப்பிலை
கறிகாய்க் கெல்லாம் தாய்
பிள்ளை.
அறிஞனைப் போல் உடலுக்கே
அன்றுடம் கொள்நோய்
இல்லை.

—"தினமணிச் சுடர்"

பெண்களைப் பெண்களாகவே வளர்க்க வேண்டும். அவர்களை ஆண்களாக வளர்ப்பது அவர்களுக்கும் கெடுதல்; வளர்க்கிற நமக்கும் கெடுதல்.

—ரூஸோ.

சான்ருேர் என்பவர் குறைகளை அறியாதவர்களல்ல; குறைகள் இருந்தும் அவைகளைத் திருத்திக் குணங்களை உண்டாக்கிக் கொண்டவர்களே சான்ருேர் ஆவர்.

—ஷேக்ஸ்பியர்,

பைசாக் கோபுரம்

(கீதா)

சமீபத்தில், "பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் எந்த நிமிஷத்திலும் விழுந்து விடலாம்." என்ற செய்தி உலக முழுவதிலுமுள்ள பத்திரிகைகளில் பிரசுரமாகியது. சில மாதங்களுக்கு முன்கூட இதே செய்தி பிரசுரமாகியது. இத்தாலி விஞ்ஞானியான கோலோ செட்டிதான் அப்போதும் இப்போதும் இத்தாலிய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார். அவ்வெச்சரிக்கையே பத்திரிகைகளில் பிரசுரமாகியது.

"சிறுபுயல் வீசினாலும் பொதுக்கோபுரம் விழுந்துவிடும்" என்றும் உடனே இதை அரசாங்கம் கவனித்துச் செப்பனிட்டால் தான் உலக அதிசயங்களில் ஒன்றெனக் கருதப்படும் பைசா கோபுரத்தை விழாமல் காப்பாற்ற முடியும். இல்லையெனில் இவ்வரிய பொக்கிஷத்தை இழந்து விடுவோம்" என்று அறிக்கையில் கூறியிருக்கிறார். கோலோ செட்டி இப்போது அக் கோபுரம் 16 அடி சாய்ந்துள்ளது. கடந்த 45 ஆண்டுகளில் கால் அங்குலம் சாய்ந்திருக்கிறதாம்.

இத்தாலி நாட்டில் பைசா நகரத்தில் உள்ள இக் கோபுரம் கி. பி. 1174–ம் வருடம் கட்ட ஆரம்பித்து கி. பி. 1350–ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. இது ஒரு மணிக்கூண்டு கட்டிடம். இது சாய்ந்து கட்டப்பட்டிருந்தபோதிலும் நூற்றுக் கணக்கான ஆண்டுகள் விழாமல் இருப்பதால் உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு வருகிறது. அதை நேரில் பார்க்கும் போதெல்லாம் எங்கே விழுந்துவிடப்போகிறதோ என்ற பயம் தோன்றுகிறதாம்.

முதல் மூன்று அடுக்குகள் நேராகத்தான் கட்டப்பட்டன. பின்னர் எஞ்சிய அடுக்குகளை சாய்வாகக் கட்டிவிட்டனர். பிறகு தட்ப வெட்ப நிலையாலும் பூமி சுழற்சியினாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சாய்ந்து வருகிறது. கி. பி. 1829–ல் இத்தாலிய அரசாங்கம் அதன் சாய்வை அளவெடுத்தபோது சுமார் 16 அடி சாய்ந்திருந்ததாம். அதன் பிறகு கி. பி. 1910–ல் அளவெடுத்தபோது மேலும் ஒரு அடி சாய்ந்து இருந்ததாம்.

கி. பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பொனேடி பைசா என்பவர் இந்தக் கோபுரத்தைக்கட்ட ஆரம்பித்தார். கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் தோமா சோடி ஆண்ட்ரி பைசானோ என்பவரால் கட்டி முடிக்கப்பட்டது. கோபுரம் முழுவதும் வெண்ணிறச் சலவைக்கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதன் உயரம் 172 அடி. அடித்தளச் சுவரின் கனம் 13 அடி. உயரப்

போகப் போக கன அளவு குறைந்து கொண்டே சென்று உச்சி அடுக்குச் சுவர்களின் கனம் 6 லிருந்து 7 அடி உள்ளது. முதல் அடுக்கில் 15 தூண்கள் கொண்ட வளைவுகளுள்ளது. மீதி ஆறு அடுக்குகளில் ஒவ்வொன்றிலும் 30 வளைவுகள் இருக்கின்றன. எட்டாவது அடுக்கில் மாதா கோயில் மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆகையால்தான் இதை மணிக்கூண்டு கடிகாரம் என்கின்றனர். கோபுரத்தினுள் மேல உச்சிக்கு ஏறிச் செல்ல 300 படிகள் கொண்ட படிக்கட்டு உள்ளது. இதை உலகின் பல பாகங்களில் இருந்தும் தினசரி அநேக யாத்திரிகர்கள் வந்து பார்த்து விட்டுச் செல்லுகின்றனர்.

கி. பி. 1928–ம் வருடம் இத்தாலிய அரசாங்கம் முடிந்தவரை பழுது பார்த்தது. பிறகு ஒரு வருடத்திற்கு 1·5 மி. மீட்டரிலிருந்து 2 மி. மீட்டர் வரை சாய்ந்து வந்து இருக்கிறது. இப்படி சாய்ந்து கொண்டே வருவதால்தான் விழுந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. உடனே தக்க முறையில் செப்பனிட்டால்தான் விழாமல் பாதுகாக்க முடியுமாம். உலகின் பல நாட்டு இன்ஜினீயர்களும், கட்டிடக் கலைஞர்களும் செப்பனிடப் பலவித யோசனைகள் கூறியுள்ளனர். அஸ்திவாரத்தைக் கான்கிரிட் போட்டு கெட்டிக்கலாம். சிமெண்ட் பூச்சு பூசலாம் என்றெல்லாம் யோசனைகள் கூறப்பட்டுள்ளது. இத்தாலிய அரசாங்கம் தற்போது செப்பனிடுவதற்கு யோசனைகூற ஒரு கமிட்டி அமைத்திருக்கிறது. அக்கமிட்டியில் அரும்பெரும் விஞ்ஞானிகளும் கட்டிடக் கலை வல்லுனர்களும் அங்கம் வகிக்கின்றனர். இவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தும் இன்னும் அது சாய்ந்து வருவதைத் தடுக்க முடியவில்லை. எங்கே பூச்சுவேலை செய்யவேண்டும்? எப்படிச் செப்பனிடுவது? என்று ஒருவருக்கும் சரியாகத் தெரியவில்லையாம். கடைசியில் விஞ்ஞானி கோலோ நெட்டிதான் ஒரு அருமையான யோசனையை வெளியிட்டுள்ளார். பல நாட்கள் ஆராய்ச்சிக்குப் பிறகு முடிவெடுத்து வெளியிட்ட யோசனை அது.

கோலோ நெட்டியின் யோசனை :—

கோபுரத்தைச் சுற்றிச் சாரங்கள் கட்டவேண்டும். அது சாய்ந்திருக்கும் பக்கத்தின் எதிர்ப்புறம் இரும்புச் சங்கிலிகளால் கோபுரத்தின் முனையில் கட்டி இழுத்து நிறுத்த வேண்டும். அப்போது அடித்தளத்தில் பிளவு பட்டு இடை வெளி ஏற்படும். அப்பிளவின் கான்கிரீட் குழம்பை ஊற்றிய பிறகு இழுத்துக் கட்டிய கோபுரத்தை அவிழ்த்து மெல்ல விட்டால் கான்கிரீட் குழம்பில் வந்து பதிந்து விடும். பிறகு அஸ்திவாரம் பலமாக ஆகி கட்டிடம் விழாமல் நிற்கும். இதே மாதிரிதான் எகிப்து நாட்டில்

(62–ம் பக்கம் பார்க்க)

வங்கக் கடலில் வண்ணத் தீவுகள்

(தமிழ்ப் புலவர் சா. ம. பக்தவத்சலம்)

சில ஆண்டுகளுக்கு முன் அந்தமான் என்று இயம்பி இருந்தால் அஃது ஒரு பயங்கர நகரம் என்றே எண்ணியிருப்பர். அதன் பொருளே வேறாகவே இருந்திருக்கும். இந்திய மக்கள் அதன் பெயரைச் செவிமடுத்த போதே கிடுகிடுத்துப் போய்விடுவர். இந்தியர்களுக்கு அந்தமான் என்றால் தீவாந்திர சிட்சை என்ற பொருள் மட்டும் தெரிந்திருந்த காலமது. தீவு முழுவதும் பெரும் சிறைச்சாலையாக வெள்ளையர்களால் கட்டப்பட்டிருந்தது. இந்தியக் குற்றவாளிகளை ஆண்டு கப்பலேற்றி அனுப்பி வைப்பதாக ஒரு தோற்றமேயாகும். கண்கொள்ளா எழில் குலுங்கும் பூஞ்சோலைகள் அந்தமானுடைய எழிலுக்கு எடுத்துக்காட்டாகும். அஃது உண்மையில் ஒரு சொர்க்க பூமி என்ற செய்தியை இன்று தெரிந்துகொள்ளும்போது அதனைச் சென்று காணவேண்டி மக்கள் உள்ளத்தில் பேராவல் உந்திச் செல்கின்றது.

அந்தமான் என்ற சொல் அழகிய மான் என்னும் பொருள்படும். எழில் மிகுந்த மான்கள் நிறைந்த இடம் என்ற காரணந்தான் அதற்கு 'அந்தமான்' என்றழைக்கப்பட்டது போலும் என்று தமிழன் கற்பனை செய்துகொள்வான். அனுமான் தென்திசை நோக்கிச் சென்று இத்தீவில் இறங்கினான் என்ற காரணத்தால் அனுமான் என்ற சொல் பின்னாளில் மருவி வழங்கலாயிற்று என்பர் வடமொழி வல்லுனர்.

எவ்வாறாயினும் இன்று மக்கள் விரும்பிச் சென்று குடியேறித் தொழில் புரிந்து வளமும் வாழ்வும் பெறக்கூடியதுமான பூலோக சுவர்க்கம் எனக் கூறுவதில் மிகையாகாது. முன்னொருகால் அரசாங்க விரோதிகளை—குற்றவாளிகளை ஆண்டு நாடு கடத்தி வந்தனர். இன்றோ ஆண்டு விரும்பிச் செல்லும் மானிடர்க்குப் போதிய வசதிகளும் வாழ்வும் அளிக்கக் காத்திருக்கின்றனர். 'அந்தமான் நிகோபார்' என்று ஒன்றுபட அழைக்கும் அவ்விரண்டும் பாரத மக்களின் நல்வாழ்வுக்கு இணைந்துள்ளது. வங்கக் கடலில் சென்னைக்குக் கிழக்கே 740 மைல்கள் கல்கத்தாவிலிருந்து 780 மைல்கள் தூரத்திலுள்ளது அந்தமான் நான்கு நாட்கள் கப்பல் பிரயாணம் செய்து அதை அடையலாம்.

அந்தமான் தீவுக் கூட்டத்தில் மொத்தம் 203 தீவுகள் உள்ளன. இங்கு பல இயற்கைத் துறைமுகங்கள் இருக்கின்றன. எங்கும் பள்ளத்தாக்குகள் நிறைந்த பச்சைப் பசேலென மனத்தைக் கவரும் ரம்மியமான இயற்கைக் காட்சி

-கள் நெஞ்சை அள்ளும் வண்ணம் திகழ்கின்றன. தீவுகளைச் சுற்றிலும் பவளப்படிவங்கள் கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள் கொண்டவை.

அந்தமான் தீவை, வடக்கு, மத்திய, தெற்கு அந்தமான் எனப் பிரித்திருக்கின்றனர். தெற்கு அந்தமான் இந்தியப் பேரரசின் கீழ் சீஃப் கமிஷனர் ஒருவரால் ஆளப்படுகிறது. அந்தமான் தீவின் அழகிய துறைமுகப்பட்டினம் போர்ட் பிளேர் என்பது. திரைக்கடலைத் துழாவி வரும் கப்பல்கள் போர்ட் பிளேரில் வந்து தங்குகின்றன. இதுவே தலைநகரமாகும். இதன்றி வேறு துறைமுகங்களும் இருக்கின்றன. அவை போர்ட் கான்வாலிஸ் வட அந்தமானிலும், மாயாபந்தர் மத்திய அந்தமானிலும், நன்கௌரி நிகோபார் தீவிலும் இருக்கின்றன.

அந்தமான் பழங்குடி மக்கள் எக்காரணத்தாலோ குறைந்து கொண்டே வருகின்றனர். அவர்கள் அனைவரும் நாடோடி வாழ்க்கை நடத்தி வந்த நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆண்கள் பன்றி போன்ற மிருகங்களை வேட்டையாடினர். பெண்களும், சிறுவர்களும் குச்சிகளைக்கொண்டு வேர் கிழங்குகளைத் தோண்டி எடுத்து வந்தனர். பழங்களைப் பறிப்பார்கள். கடற்கரையோரங்களில் மீன், ஆமை இவைகளைப் பிடிப்பர். வேளாண்மைத் தொழில் இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் தாங்கள் வாழ்ந்து வந்த பிரதேசத்தை மிக்க அக்கறையுடன் பாதுகாத்து வந்தனர். அந்நியர் எவரேனும் காணப்பட்டால் உடனே வில்லம்புகளுடன் போருக்குத் தயாராகிவிடுவர்; ஆதலால் அந்நியர் எவரும் அங்கு நுழையாமலிருந்தனர்.

ஊங்கி என்னும் ஆதிக் குடியினர் இத்தீவு முழுவதிலும் வசித்து வருகின்றனர். அந்தமான் ஆதிக் குடியினரைப் போலவே நீக்ரோ இனத்தவர். இவர்களது கலாச்சாரமும் மொழியும் வேறுபட்டவை. ஊங்கிப் பெண்கள் ஒருவகைக் குஞ்சத்தையும் ஆண்கள் லங்கோடு போன்ற மர உரியையும் அணிகிறார்கள்.

தெற்கு மத்திய அந்தமானின் மேற்குக் கரைகளில் ஜாரவர்கள் வசித்து வருகின்றனர். மொழியாலும் கலாச்சாரத்தாலும் அந்தமானியரை ஒத்தவர்கள். ஜாரவர்கள் ஒருவரையும் அனுமதிப்பதில்லை. மிக்க பகைமை உணர்ச்சி கொண்டவர்கள். இம்மட்டும் அவர்கள் வாழும் இடத்திற்குத் துணிந்து எவரும் போகவில்லை.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் பூமத்தியரேகை பிரதேச பருவநிலை உள்ளது. குறைந்த அளவு வெப்பம் 62 டிகிரி பாரன்கீட். உச்ச அளவு 92 டிகிரி பாரன்கீட். டிசம்பரிலிருந்து பிப்ரவரி வரை குளிர்காலம்; மார்ச்சிலிருந்துமே வரை கோடைகாலம். மே மாத இறுதியில் பருவ

மழை தொடங்கி நவம்பர் வரை பெய்யும். ஆண்டுக்கு சுமார் 120 அங்குலம் மழை பெய்கின்றது.

மலைகள் சூழ்ந்த அந்தமான் அடர்ந்த கானகங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இக்கானகங்கள் அந்தமானின் அளப்பரும் செல்வங்களாகும். கானகங்களில் உள்ள மரங்கள் சிறப்பானவை. இந்தியாவில் அத்தகைய மரங்கள் இல்லை. பாடக், அந்தமான் செம்மரம், பப்பிடா குர்ஜான் முதலியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இங்கு தேக்கு மரங்கள் இல்லை.

கானகங்கள் என்றதும் காட்டு மிருகங்களே நம் கண்முன் நிற்பன. இங்கு மிருகங்களே இல்லை. அந்தமான் என்ற பெயருக்கேற்ப அழகிய மான்கள் ஆண்டு பல்கி வளர்கின்றன. அங்கு பன்றிகள், பாம்புகள், அட்டை போன்றவை இருக்கின்றன. பசு, எருமை, யானை முதலியவை அங்கு இப்போதுதான் காணப்படுகின்றன. குதிரைகளைக் காண்பது குதிரைக் கொம்பே. காகமும் சிட்டுக் குருவியும் அங்கில்லை.

பூர்வகுடிகளைத் தவிர இந்திய மக்களும் பர்மிய மக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். கடும் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு அந்தமானை அடைந்த இந்தியர்கள் அங்கு இருக்கின்றனர். அவர்களுடைய சந்ததியினர் பலர் இருக்கிறார்கள்.

இப்போது அந்தமான் நிக்கோபாரில் 66,000 பேர் இருக்கின்றனர். பல்வேறு சமயத்தினர் வாழ்கின்றனர். இங்கு இந்தியாவாலும் பேசப்படுகிறது. அதுவே இத்தீவில் பொதுமொழியாக உள்ளது. அவரவர் இல்லங்களில் தாய்மொழியே பேசப்படுகிறது. இங்கு 200 கிராமங்கள் இருக்கின்றன. பயிர்த் தொழில் முக்கிய ஜீவனம். மரங்கள் நிறைந்திருப்பதால் வீடுகள் எளிதாகக் கட்டப்படுகின்றன.

அந்தமானில் குடியேறிய ஜனங்களின் வாழ்க்கைத்தரம் சற்று உயர்வாகவே இருக்கிறது.

தென் கிழக்காசியாவிலேயே மிகப் பெரிதான மர ஆலை இங்கு இருக்கிறது. நெருப்புப் பெட்டி, பிளைவுட் பலகைகள் செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. எண்ணெய் ஆலை ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. கடற்காளான், கிளிஞ்சு, தேங்காய் மூடி முதலியவை கொண்டு குடிசைத் தொழில்கள் செய்யப்படுகின்றன. நெல், தேங்காய், வாழை, அன்னாசி, பெம்ளிமாஸ் முதலியவை அதிகமாகப் பயிரிடப்படுகின்றன.

இங்கு நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி வல்லுனர்கள் நிலக்கரி கிடைக்கலாம் என்று கூறி இருக்கின்றனர். இவற்றால் அத்தீவு மாபெரும் முன்னேற்றத்தை அடையும் என்று எண்ணுகின்றனர்.

அந்தமானை அகில உலகத்திற்குக் காட்டியது இங்குச் செல்லு

வார் சிறையே. இதனால்தான் அந்தமான் என்றவுடன் கிடுகிடுத்துப் போயினர். சுதந்திரம் அடைந்த பின்பு கைதிகளை அங்கு அனுப்பவில்லை. அங்கிருந்த அனைவரும் தீவின் குடிகளாக மாறிவிட்டனர். அச்சிறை ஏழு விதமான கோபுர முகடுகளைக் கொண்டது. இரண்டாவது உலகப் போரில் இரண்டு முகடுகள் சேதமுற்றன. இப்போது ஒன்று உள்ளூர் சிறை. மற்றொன்று சர்க்கார் ஊழியர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பிறிதொன்றில் அரசாங்க மருத்துவமனை இயங்கி வருகிறது. இச்சிறையில்தான் திரு.வி..டி. சவர்க்கார் எட்டு ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தார்.

இத்தீவுக்கு இன்னும் நல்ல செய்திப்போக்குவரத்துதொடர்புகளை அரசாங்கம் செய்யவில்லை. இத்தீவு முன்னேற்றமடைய செய்திப் போக்குவரத்து முன்னேற்றமடைய வேண்டும். இப்போது சென்னையிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் கப்பல்கள் போகின்றன. ஆனால் இக்கப்பல்கள் ஒழுங்காகப் போகவில்லை. காலதாமதம் ஆகின்றன. அந்தமானுக்குக் கப்பலில் நான்கு நாட்களில் போய்ச் சேரலாம். அரசாங்கச்செய்திகளைச் சிறிது நாள் தோறும் வெளியிடுகின்றனர். தினச் செய்திகளை ரேடியோ மூலமாகத்தான் அறிய வேண்டும்.

அந்தமானில் விமானத் திடல் ஒன்று இருக்கிறது. ஆனால் இது அத்துணை பயனுள்ளதாயில்லை. ஏனெனில் அங்கு மலைப் பகுதிகள் அதிகம். சமமான பகுதியேயில்லை. ஆனதால் சிறந்த விமானத் திடல் ஒன்றை அமைத்தால் போக்குவரத்து மிகச் சிறந்த முறையில் நடைபெறும்.

அந்தமான் மிக்க விரைவில் சிறப்படையப் போகிறது. மக்கள் திரளான பேர் அங்கு போய்க் குடியேறப் போகின்றனர்.

—"நவ இந்தியா"

(58—ம் பக்கத் தொடர்ச்சி)

பழங்காலச் சின்னங்களான ஆபு சிலைகளை செப்பனிட்டு விழவொட்டாமல் செய்திருக்கிறார்களாம். பைசா நகரத்துக் கோபுரத்தை இழுத்து நிறுத்த 15,000 டன் காங்கிரீட் தேவைப்படுமாம். இந்த ஒரு வழியினால்தான் உலக அதிசயப் பெட்டகங்களில் ஒன்றான இது விழுந்து விடாமல் பாதுகாக்க முடியும்.

இத்தாலிய விஞ்ஞானியான கலிலியோ இக் கோபுரத்தின் மாடி மீதிருந்து வானிலை ஆராய்ச்சி நடத்தினார் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தச் செய்திக்கு ஆதாரம் ஒன்றும் இல்லை. இத்தாலிய மக்களில் ஒருசிலரால் இந்தக் கதை பேசப் படுகிறதாம்.

—"தினமணிச் சுடர்"

குழந்தைகள் திருநாள்

—வித்துவான் நடேச நாராயணன்—

இலக்கியத்தில் குழந்தை

குழந்தைகளைப் போற்றும் வழக்கம் இன்று நேற்றுதான் தோன்றியது என்று எண்ணிவிட வேண்டாம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நம் நாட்டில் இப்பண்பு இருந்து வந்திருக்கிறது.

1800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அறிவுடை நம்பி என்னும் பாண்டிய மன்னன் குழந்தைகளைப் போற்றிப் பாடியுள்ளான். அது புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்க்கும்
மயக்குறு மக்கள்

இப்படி ஒரு பாட்டுத்தான் என்பதில்லை. ஓர் அதிகாரமே திருக்குறளில் இடம் பெற்றுள்ளது. புதல்வரைப் பெறுதல் அல்லது மக்கட்பேறு என்பதே அந்த அதிகாரம்.

மக்கள் மெய்தீண்டல் உடற்கின் பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

இவ்வாறு ஓர் அதிகாரம் மட்டுமன்றி ஒரு சிறு நூலையே ஔவையார் படைத்தார். ஆத்திசூடி என்பதுதான் அந்நூல். இப்படி ஒரு சிறு நூல் மட்டுமன்று பெரிய நூலையே நம் நாட்டவர் படைத்தனர். "பிள்ளைத் தமிழ்" என்பதுதான் அந் நூல்.

96 பிரபந்தங்களுள் ஒன்றுதான் இப் பிள்ளைத் தமிழ். இந்தப் பிரபந்தம் பெற்ற செல்வாக்கை மற்றப் பிரபந்தங்கள் பெறவில்லை. கோவை, கலம்பகம், பள்ளு, உலா போன்ற பிரபந்தங்கள் ஒரு சிலவே தமிழில் தோன்றியுள்ளன. ஆனால் பிள்ளைத் தமிழோ நூற்றுக் கணக்கில் தோன்றியுள்ளன. இதனால் நம் நாட்டவர் குழந்தையின்பால் காட்டிய ஆர்வத்தை உணரலாம்.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்ற பழமொழியால் நம் நாட்டவர் குழந்தையை தெய்வத்துக்குச் சமமாகவே போற்றினர் என்பதை அறியலாம். அதனால்தான் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தின் மூலம் தெய்வங்களையும் அடியார்களையும் குழந்தையாக எண்ணிப் பாடுவதிலேயே இன்பம் கண்டனர்.

முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ் முதலாயின, தெய்வத்தைக் குழந்தையாக எண்ணிப் பாடியவை. திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ் முதலாயின, அடியார்

களைக் குழந்தையாக எண்ணிப் பாடியவை.

சமூகத்தில் குழந்தை

மேற்கூறியவாறு இலக்கியத்திலும் புலவர் நாவிலும் பெற்றோர் சூழலிலும் நாம் குழந்தையைப் போற்றும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது. தாம் பெற்ற குழந்தைக்குத் தம் குடும்பத்துக்குள் விழாவாற்றியிருக்கிறார்கள். ஆனால் இன்றுபோல் குழந்தைகள் விழாவை ஒரு சமுதாய விழாவாக என்றும் எங்கும் கொண்டாடியதில்லை. நாடு முழுமையும் அதற்கென ஒரு தினத்தை ஒதுக்கியதும் இல்லை.

மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்படும் நம் இந்திய நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள்தான் முதன் முதலாகத் தம் பிறந்த தினத்தை குழந்தைகள் தினமாகக் கருதி போற்றப்படல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

தமது தனிப்பட்ட விழாவை விட பொதுவிழா நல்லது என்று எண்ணினர். பயனுடையது என்றும் கருதினர். அதனால் தம் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடச் சொன்னர்.

தம் பிறந்த நாள் நினைவை ஓர் இலக்கிய விழாவாகவோ ஒரு சமய விழாவாகவோ ஓர் அரசியல் விழாவாகவோ ஒரு கலை விழாவாகவோ நடத்த விரும்பாமல் குழந்தைகள் விழாவாக அவர் நடத்த விரும்பிய காரணம் என்ன ?

வருங்காலப் பெரியவர்களும் அரசியல் ஞானிகளும் தேசத்தியாகிகளும் சமயத்தலைவர்களும் கலைஞர்களும் இன்றைய குழந்தைகளின் மத்தியிலிருந்து தான் தோன்றுகிறார்கள். அதேபோல் வருங்காலத் திருடர்களும், துரோகிகளும், அயோக்கியர்களும்கூட இன்றைய குழந்தைகளின் மத்தியிலிருந்துதான் தோன்றுகிறார்கள்.

எனவே, இன்றைய குழந்தைகளின் மத்தியிலிருந்து கள்ளர்களும் அயோக்கியர்களும் துரோகிகளும் வஞ்சகர்களும் தோன்றாமல், தியாகிகளும் ஞானிகளும் கலைஞர்களும் மற்றவர்களும் தோன்ற வேண்டும் என்றால் இளமையிலேயே குழந்தைகட்குத் தக்க உணர்வு ஊட்டப்படல் வேண்டும். ஏற்ற பயிற்சியும் அளிக்கப்படல் வேண்டும்.

இவற்றை நெஞ்சில் நிறுத்தித் தான் நேரு அவர்களும் நம் நாட்டுக் குழந்தைகளிடம் பேரன்பு காட்டி வந்தார் அவர்களது நல்வாழ்வில் ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்தார். அதனால்தான் தம் பிறந்த நாள் நினைவு விழாவையும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

— "நவ இந்தியா"

Edited Printed and Published by. P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.